# நெற் செய்கைக்கான மானியத்தின் மூலம் உரம் வழங்கல் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு அறிக்கை - 2012



செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு பிரிவு

அறிக்கை இல. YS/PA/பசளை/2012/02

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

# 1. நிறைவேற்றுப் பொழிப்பு

இலங்கையின் விவசாயப் பொருளாதாரத்தை மேலும் முன்னேற்றகரமான நிலையில் தீர்க்கமாக தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கு நெற் செய்கைக்காகப் பயன்படுத்தப்படும் உரக் கிரயத்தில் 90 சதவீதம் அரசாங்கத்தால் ஏற்கப்பட்டு 2005 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட வயலுக்கான உர மானிய நிகழ்ச்சித்திட்டம் 2012 ஆம் ஆண்டு வரையில் 7 ஆண்டு காலத்தைப் பூர்த்திசெய்திருந்தது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் பின்வருமாறாகும்.

i. நெற்பயிர்ச்செய்கைக் கிரயத்தைக் குறைத்தல்.

ii. நெற் பயிர்ச்செய்கைக்காக விவசாயிகளுக்குத் தைரியமூட்டல்.

iii. நெல் உற்பத்தியை அதிகரித்தல்.

iv. நெற் பயிர்ச்செய்கை வருமானத்தை உயர்த்துதல்.

v. நெற் பயிர்ச்செய்கையை பொருளாதார ரீதியாக இலாபகரமான நடவடிக்கைக்கு உட்படுத்துதல்.

vi. உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தும் அரிசிப் பற்றாக்குறையைக் குறைத்தலும்.

vii. சர்வதேச சந்தைக்கு பாரம்பரிய அரிசி வகையை உயர்ந்த விலைக்கு விற்பனை செய்தல்.

மேற்குறித்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு சந்தையில் ரூபா 2,750 இற்கான 50 கிலோ கிராம் அளவான இரசாயன உரப் பொதியை ரூபா 350 ஆன மிகக் குறைந்த விலைக்கு விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

இவ் உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக ஈடுபடுத்தப்படும் அரச நிதி ஆக்கபூர்வமான வகையிலும் செயற்திறனாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என மதிப்பிட்டு நீண்ட காலப்பகுதியில் இரசாயன உரப் பாவனையின் மூலம் ஏற்படும் சுற்றாடற் தாக்கத்தை மதிப்பிடுவது போன்ற விடயங்களைப் பரீட்சிப்பதே கணக்காய்வின் நோக்கமாகும்.

இந் நோக்கத்திற்குரித்தாக மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் போது கூட்டாக நோக்குகையில் உர மானியத்தின் விளைவாக நெல் உற்பத்தி செய்யப்பட்ட வயல் அளவு, பயன்படுத்தப்பட்ட இரசாயன உர அளவு மற்றும் ஏக்கர் வரியின் சேகரிப்பு அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் இதற்கு ஒப்பாக நெல் உற்பத்தியும் அதிகரித்திருந்த போதிலும் நெல் இறக்குமதி குறைவடைந்திருக்கவில்லை. மேலும் நெல் உற்பத்தியில் அதிகரிப்பு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் ஒரு ஏக்கரிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நெல் அறுவடையில் முன்னேற்றம் இன்மை தெட்டத்தெளிவாகியிருந்தது. இதற்குரித்தான முக்கிய அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

- உரத் தேவைப்பாட்டினை மதிப்பிடுவதிலுள்ள சிக்கல்கள்.
- மதிப்பிடப்பட்ட உர அளவினை கோருதல், வழங்கல் மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான சிக்கல்கள்.
- பரிந்துரைக்கப்பட்டவாறு உரம் பயன்படுத்தப்படாமை.
- நெற் செய்கை மேற்கொள்ளப்படாத நெற் காணிகளின் சதவீதத்தில் போதிய முரண்கள் ஏற்பட்டிராமை.
- இரசாயன உரப் பயன்பாட்டிற்கு கூடிய விருப்பைத் தெரிவித்து சேதன உரப் பயன்பாட்டிற்கு விருப்பமின்மை.
- நீர்ப்பாய்ச்சன முறைமை உரிய முறையில் பேணப்பட்டிராமையால் ஏற்படும் பயிர்ச்செய்கைத் தாக்கமும் சுற்றாடல் சிக்கல்களும் நிலவுதலும்.
- நெற் செய்கையின் ஒட்டுமொத்தக் கிரயம் மேலும் உயர் மட்டத்தில் காணப்பட்டது.
- அரிசி இறக்குமதிக்காக பாரிய அன்னிய செலாவணி ஒன்று மேலும் செலவிடப்படல்.
- நிகழ்ச்சித்திட்டத்திற்கு தொடர்புபடும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக ஏனைய உத்தியோகத்தர்களின் பங்களிப்பின் போதிய தன்மை தொடர்பான சிக்கல் நிலவியது.
- இறக்குமதி செய்யப்பட்ட உரங்களின் தரம் மற்றும் கொள்வனவு நடைமுறை தொடர்பான சிக்கல்கள்.

மேலும் நீண்டகாலமாக நாட்டில் இரசாயன உரப் பயன்பாட்டின் மூலம் ஏற்படக்கூடிய சுற்றாடல் தாக்கம் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. இது தொடர்பாகக் கற்பதற்காக கமநல மற்றும் சுற்றாடல் தொடர்பான நடவடிக்கை எடுக்கும் நிறுவகம் மற்றும் பல்கலைக்கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி தொடர்பான அறிக்கைகளும் இணையதளத்தின் மூலம் பெறப்பட்ட சில தகவல்களும் கருத்திற்கொள்ளப்பட்டன. இதன் படி, நீர்த்தாவரம் பரவலடைந்து மீன் இறப்பிற்கு ஏற்படும் தாக்கம் தவிர்ந்த இரசாயன உரப் பயன்பாடு தொடர்பால் ஏற்படும் சுற்றாடற் தாக்கம் தொடர்பாக போதிய சுற்றாடற் கல்வியும் இலங்கையில் நடாத்தப்பட்டமைக்கு தகவல்கள் கண்டறியப்பட்டிருக்கவில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட முக்கிய தீர்மானங்களின் படி, கீழே காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் தொடர்பாக முறையான கவனம் கோரப்பட வேண்டும்.

- உரப் பரிந்துரை, மதிப்பிடல் (திட்டமிடல்), கோரப்பட்டல், விநியோகித்தல், கண்காணித்தல் மற்றும் நெற்பயிர்ச்செய்கைக்கு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகள் போன்று இறக்குமதி செய்யப்படும் உரத்தின் தரத்தைப் பேணும் செயற்பாடுகளுக்குரிய சகல நிலை உற்பத்தியாளர்களுக்கு முறையான நடைமுறை அறிமுகப்படுத்தல்.

- விவசாயக் காணிகளின் பெயர்ப்பட்டியல் உடனடியாக நாளதுவரையாக்கல்.

- சேதன உரப் பயன்பாட்டின் போதான முக்கிய உறுதிப்படுத்தல்கள் மற்றும் நெடுங்கால இரசாயன உரப் பயன்பாட்டின் மூலம் ஏற்படக்கூடிய சுற்றாடல் தாக்கத்தை கருத்திற்கொள்ளல்.

- நெற்பயிர்ச்செய்கை தொடர்பாக வெற்றிகரமான நீர்ப்பாசன முறைகளிலுள்ள பிரபலமான பங்களிப்புகளைக் கருத்திற்கொண்டு இதற்குரித்தான நிறுவகங்களுக்கு அறிவூட்டி மிக விரைவில் நீர்ப்பாசன முறைகளை மறுசீரமைத்தல்.

- கமநல சேவைகள் நிலையத்திடமுள்ள களஞ்சிய வசதிகளைப் போன்று உரங்களை இறக்குமதி செய்யும் கம்பனிகளிடமுள்ள களஞ்சிய வசதிகள் (இயளலவு) அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.

- உரங்கள் கொள்வனவு செய்யப்படுவது முதல் விவசாயிகளால் நிலத்திற்கு உரம் இடப்படும் சந்தர்ப்பம் வரை இவை குறித்து கண்காணிக்க வேண்டிய தற்போது வெற்றிட நிலையிலுள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களப் பதவியணியினர் மற்றும் ஏனைய தேவையான வளங்களை வழங்குதல்.

➢ உரங்களை இறக்குமதி செய்வதற்குரிய கொள்வனவு நடைமுறைகளைச் சரியாக பின்பற்றுதல்.

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அனைத்தும் எய்தப்படுவதற்காக கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட மேற்குறித்த துறைகளின் கீழ் காண்பிக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் இதற்குரிய பரிந்துரைகளுடன் துறைகளுக்குரித்தான ஏனைய விடயங்கள் குறித்தும் முறையான கவனம் கோரப்பட்டு தேசிய ரீதியில் முக்கியமான இந் நிகழ்ச்சித்திட்டம் வெற்றியீட்டப்படுவதற்கு செயற்பட முடியும்.

## 2. அறிமுகம்

### 2.1 பின்னணி

மொத்தத் தேறிய உற்பத்திக்கு 12 சதவீதப் பங்களிப்பைச் செலுத்துவது மொத்த ஊழியப்படையின் 30 சதவீதத்திற்கு அதிகளவில் தொடர்புபடுவது, கிராமிய மக்களின் பிரதான வாழ்வாதார வழிமுறையாதல் மற்றும் நாட்டு மக்களின் முக்கிய உணவான சோறு வழங்கும் வழிமார்க்கமாக இந் நாட்டு பொருளாதார நடைமுறையில் காணப்படும் பிரதான பங்களிப்பின் காரணமாக விவசாயம், இலங்கைப் பொருளாதாரத்தின் அடிப்படைக் காரணியாகக் கருதப்படுகின்றது. உணவுப் பாதுகாப்பு, வருமானப் பங்கீட்டின் சமநிலைத் தன்மை, வறுமை ஒழிப்பு மற்றும் தேசிய மட்டத்தில் தன்னிறைவை உறுதிப்படுத்தல் போன்ற நோக்கங்களை அடைவதற்காக கமநலத்தில் துரிதமான முன்னேற்றம் தேவைப்பட்டுள்ளது.

போதியளவு சூரியஒளி பெறல், முறையான நீர்ப்பாசன முறைமையைப் பேணல் மற்றும் வளமான மண்ணைப் பேணுதல் என்பன நெற்பயிர்ச்செய்கையை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குத் தேவையான அடிப்படைக் காரணிகளாகும். பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் காணியிலுள்ள வளமான தன்மை அதிலுள்ள கனியவள அளவில் தீர்மானிக்கப்படுகின்றது. மண்ணிலுள்ள கனியவள அளவில் குறைவு ஏற்படுகையில் இதனைத் தவிர்த்துக் கொள்வதற்காக பல்வேறு உர வகைகளை மண்ணில் சேர்த்துக்கொள்ள வேண்டியுள்ளது. இலங்கையின் உணவு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் மொத்த நில அளவில் கூடியளவு நெற் பயிர்ச்செய்கைக்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக பாரியளவிலான நீர்ப்பாசன முறைகளிலிருந்து இயற்கையான மழைநீரைச்

சார்ந்து நெற் பயிர்ச்செய்கைக்குத் தேவையான நீர் வழங்கும் முறை வரை பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. நெற் பயிர்ச்செய்கைக்குத் தேவையான மூலக் காரணியான நீர் தவிர்ந்த நிலத்தின் வளத்தைப் பேணி கூடிய விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்காக இரசாயன உரப் பயன்பாடு தொடர்பில் கூடியளவு ஊக்கம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உலக சந்தையில் உரங்களின் விலை அதிகரித்த காரணத்தால் அவ் அதிகரித்த விலையை விவசாயிக்கு தனியாக ஏற்றுக்கொள்வதற்கு சிரமமானமையால் உரக் கிரயத்தின் 90 சதவீத அளவை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு நெல் விவசாயிக்கு நிவாரணம் வழங்கி நெற்பயிச் செய்கைக்கான கிரயத்தைக் குறைப்பதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

தேசிய ரீதியாக பாரியளவில் முக்கியத்துவம் வாய்ந்த தேசிய உர மானிய நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்வாண்டான 2012 ஆம் ஆண்டின் போது கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் கீழ் தேசிய உரங்கள் செயலகம், தேசிய அபிவிருத்தி திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை உரக் கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி ஆகிய நிறுவகங்கள் கூட்டாகச் சேர்ந்து செயற்படுகின்றன. நாட்டின் உரத் தேவைப்பாட்டை மதிப்பிடல், உரங்களை இறக்குமதி செய்தல் மற்றும் விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகள் தேசிய உர மானிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் முக்கிய பொறுப்பை ஏற்கும் தேசிய உரங்கள் செயலகத்தை மையமாகக் கொண்டு செயற்படுகின்றது.

### 2.2 கணக்காய்விற்கான அதிகாரப் பொறுப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆம் அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அதிகாரத்தின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

### 2.3 கணக்காய்வின் நோக்கமும் உர மானியத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தல்

2,500 ஆண்டுகளுக்கு மேலாக எழுத்துமூல வரலாற்றுரிமையைக் கொண்ட இந்நாட்டு வரலாற்றில் விஜயனின் வருகையிலிருந்து மக்கட் குடியேற்றத்தை உருவாக்கி இதற்கு இணையாக விஸ்தரிக்கப்பட்ட மக்களின் அடிப்படை உணவுத் தேவைப்பாட்டைப் பூர்த்திசெய்யும் விவசாயத்துறைக்கு, தற்போதைய இலங்கைப் பொருளாதாரத்திலும் முக்கிய இடம் உரித்தாக்கப்பட்டுள்ளது. கிராமிய மக்களின் பெரும்பாலான சீவனோபாய மார்க்கமாகவும் இந்நாட்டு மக்களின் பிரதான உணவான சோற்றை

வழங்கும் பிரதான மார்க்கமாக விவசாயத் துறையில் நெற்பயிர்ச்செய்கைக்கு மிக முக்கிய இடம் உரித்தாக்கப்பட்டுள்ளது. சர்வதேசச் சந்தையில் இரசாயன உரத்தின் விலைகளில் உயர்வு நிலவுவதும், நெற்பயிர்ச்செய்கைக்காக ஈடுபடுத்தப்படும் ஊழியம், விவசாய நாற்றுக்கள், விவசாய இரசாயனங்கள் உட்பட ஏனைய பொருட்களின் விலைகள் உயர்வடைந்த காரணத்தால் ஒரு ஏக்கர் நெல் பயிர்ச்செய்கையின் கிரயம் வெகு விரைவாக உயர்வடைந்தமையால் மானியங்களை வழங்கும் தேவைப்பாடு ஏற்பட்டிருந்தது. இத் தேவைப்பாட்டின் காரணமாக நாட்டில் நெல் உற்பத்தி நிலையான நிலையில் செயற்படுத்துவதற்காக அரசாங்கத்தால் உரக் கிரயத்தில் 90 சதவீதம் மானியம் வழங்கப்பட்டு 2005 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டது. அதிலிருந்து வயல் உர மானியத்திற்காக வருடாந்தம் அரசாங்கத்தால் பாரிய கிரயம் ஏற்கப்படுகின்றது. 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை இதற்காக அரசாங்கத்தால் ஏற்கப்பட்ட கிரயம் பின்வருமாறு ரூபா 146,186 மில்லியனாகக் காணப்பட்டது.

| **ஆண்டு** | **அரசாங்கம் ஏற்கும் கிரயம்** |
|---|---|
| 2005 | 6,285 |
| 2006 | 10,699 |
| 2007 | 10,998 |
| 2008 | 26,450 |
| 2009 | 26,935 |
| 2010 | 22,278 |
| 2011 | 42,541 |
| | --------- |
| மொத்தம் | 146,186 |
| | ====== |

(மூலம் : தேசிய உரங்கள் செயலகம்)

மேற்குறித்த வகையில் அரசாங்கத்தால் கூடியளவு கிரயத்தை ஏற்றுச்செயற்படுத்தப்படும் மானிய உர விநியோக நிகழ்ச்சித்திட்டத்தில் பொருளாதார வினைத்திறன் மற்றும் ஆக்கபூர்வமான பரீட்சிப்பும், மானிய உர நிகழ்ச்சித்திட்டம் காரணமாக அரிசி இறக்குமதிக்காகச் செலவிடப்பட்ட அன்னிய செலாவணி எஞ்சியுள்ளதா என்பது குறித்து பரீட்சிப்பதும் இரசாயன உரப் பயன்பாட்டின் காரணமாக நேர்ந்துள்ள சுற்றாடல் தாக்கங்களைப் பரீட்சிப்பதும் இச் செயலாற்றல் கணக்காய்வின் நோக்கமாகும்.

## 2.4 கணக்காய்வின் நோக்கெல்லை

பதவியணி, ஏனைய வளங்கள் மற்றும் காலம் போன்ற காரணிகளின் வரையறை காரணமாக கடந்த ஆறு ஆண்டுகளின் உர விநியோகமும் நெல் பயிர்ச்செய்கைத் தரவுகளையும் பயன்படுத்தி அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் குருநாகல் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் களஆய்வு தெரிவு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு இச் செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 2.5 கணக்காய்வு பிரவேசம், நோக்கம் மற்றும் எடுகோள்கள்

கணக்காய்வுப் பிரவேசம்

i. உர மானியத்தை வழங்குவதற்குரிய கொள்கைக்கூற்று, அதிகாரச்சட்டங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்களின் ஆய்வு

ii. உர மானியம் மற்றும் நேரடித் தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து தரவுகளைப் பெற்றுக்கொள்ளலும் பகுப்பாய்வும்.

iii. உரிய ஏனைய ஆவணங்களின் மீளாய்வும் தொடர்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்தான ஆராய்ச்சியும்.

**கணக்காய்வின் அடிப்படை நோக்கம்**

i. நெல் விவசாயிகளுக்கான மானியமாக உர விநியோக நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு அரச நிதியைப் பயன்படுத்துகையில் ஆக்கபூர்வம், வினைத்திறன் மற்றும் பொருளாதாரத் தன்மையை மதிப்பிடல்.

ii. உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தியதன் பின்னர் அரிசி இறக்குமதிக்காகச் செலவிடப்பட்ட அன்னிய செலாவணி சேமிப்பு மற்றும் பெறப்பட்ட நலனையும் நிர்ணயித்தல்.

iii. இரசாயன உரப் பயன்பாட்டால் ஏற்படும் சுற்றாடல் தாக்கத்தை மதிப்பிடல்.

## 2.6 வரையறைகள்

இக் கணக்காய்வைத் திட்டமிடுகையில் வரையறைகளைக் குறைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. எவ்வாறெனினும், பின்வரும் வரையறுக்கப்பட்ட நிலைமைகளின் கீழ் இக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

(i) இரசாயன உரப் பயன்பாட்டின் மூலம் மண்ணிற்கும் ஏனைய சுற்றாடல் முறைமைகளுக்கு ஏற்படும் தாக்கத்தை மதிப்பிடுவதற்காக சுற்றாடல் தொடர்பாகச் செயற்படும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பத்தலேகொட நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம், விவசாயத் திணைக்களம் எனும் நிறுவகத்தின் மூலம் இரசாயன உரப் பயன்பாட்டினால் சுற்றாடல் தாக்கத்தை மதிப்பிடப்படுவதற்கு இலக்கிடப்பட்டதா என்பது தொடர்பாக பொதுமானளவு தகவல்கள் பெற்றுக்க கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ii) இலங்கை அரசாங்கத்தின் பல்கலைக்கழகங்கள் மற்றும் விவசாய விஞ்ஞான பீடத்தின் மூலம் அத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக இணையதளத்தினூடாக ஆராய்ந்தறிகையில் அத்தகைய ஆய்வுகள் தொடர்பான தகவல்கள் எதுவும் கண்டறியப்படுவதற்கு முடியாதிருந்தது. இந் நிலை காரணமாக இரசாயன உரம் பயன்படுத்தப்பட்டமையால் மண்ணிற்கும் ஏனைய சுற்றாடல் முறைகளுக்கும் ஏற்படக்கூடிய தாக்கத்தை மதிப்பிடுவதை மட்டுப்படுத்தக் காரணமாகியது.

(iii) உரக் கொள்வனவு தொடர்பாக கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சினால் 2013 சனவரி 13 ஆம் திகதி கோரப்பட்ட தகவல்கள் 2013 யூலை 31 ஆம் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் கொள்வனவு நடைமுறை முறைப்படி பின்பற்றப்பட்டுள்ளதா என்பது தொடர்பான அவதானிப்புக்களை சமர்ப்பிக்கப்பட முடியாதிருந்தது.

## 3. விபரமான கண்டுபிடிப்புகள், பரிந்துரைகளும் நிறுவகத்தின் கருத்துத் தெரிவிப்பும்

### 3.1 உர மானிய நிகழ்ச்சித்திட்டம் செயற்படுவதுடன் இலங்கை நெற் பயிர்ச்செய்யும் வயல் காணிகளின் அளவில் அதிகரிப்பு

உர மானிய வழங்கலின் நோக்கில் ஒரு நோக்கான உள்நாட்டில் நெற்பயிர்ச்செய்கை பண்ணக்கூடிய வயல் காணி அளவின் படிப்படியான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாகும். 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை இலங்கையில் பயிரிடப்படும் வயல் காணிகளின் அளவு தொடர்பான தரவுகள் பின்வருமாறாகும்.

| **ஆண்டு** | **பயிரிடப்பட்ட வயல் காணிகளின் அளவு சிறுபோகம் - பெரும்போகம் (ஹெக்டேயர்)** | **முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக (குறைதல்) சதவீதமாக** |
|---|---|---|
| | (ஹெக்.) | சதவீதம் |
| 2005 | 937,175 | -- |
| 2006 | 910,493 | (2.8) |
| 2007 | 816,716 | (10.28) |
| 2008 | 1,052,990 | 28.92 |
| 2009 | 977,145 | (7.2) |
| 2010 | 1,065,281 | 8.3 |
| 2011 | 1,217,929 | 14.3 |

(மூலம் : ஹெ.கொ.க.ஆ. மற்றும் ப நிறுவகம்)

பயிரிடப்பட்ட வயல் காணிகளின் அளவு தொடர்பான தரவுகளைக் கருத்திற்கொள்கையில் 2006 ஆம் 2007 ஆம் ஆண்டுகளின் போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக பயிரிடப்பட்ட வயல் காணிகளின் அளவு குறைவடைந்திருந்ததுடன் 2008 ஆம் ஆண்டு முதல் முறைப்படியல்லாத போதிலும் விருத்தியடையும் போக்கைக் காணக்கூடியதாக இருந்தது. எவ்வாறெனினும், ஒட்டுமொத்தமாக எடுக்கையில் நாட்டிலுள்ள அறுவடை செய்யக்கூடிய வயலின் அளவு ஆண்டின் ஒவ்வொரு போகத்திலும் பயிரிடப்படும் உள்ளபடியான காணி அளவுடன் கருத்திற்கொள்கையில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய சதவீத காணியின் அளவு ஒவ்வொரு போகத்திலும் பயிரிடப்படாத வயல் காணியாக பயன்படுத்தப்படாதிருப்பது அவதானிக்கப்பட்டது.

2005 முதல் 2010 வரையான காலப்பகுதியின் போது பெரும்போகத்தின் போது மாத்திரம் நெல் பயிரிடப்படக்கூடிய வயல் காணியின் அளவும் உண்மையாக நெல் பயிரிடப்பட்ட வயல் காணிகளுக்கும் இடையே நிலவிய வேறுபாடுகள் பின்வருமாறாகும்.

| **ஆண்டு** | **பயிரிடப்பட்ட கூடிய வயல் காணிகளின் அளவு (ஹெக்)** | **பெரும்போகத்தின் போது பெறப்பட்ட வயல்காணிகளின் அளவு (ஹெக்)** | **பயிரிடப்படாது கைவிடப்பட்ட வயல் காணிகள் (ஹெக்)** | **பயிரிடப்படாத காணிகளின் அளவு பயிரிடப்பட்ட காணிகளின் அளவின் சதவீதமாக** |
|---|---|---|---|---|
| 2005 | 703,250 | 580,562 | 122,688 | 17.5 |
| 2006 | 708,738 | 591,297 | 117,441 | 16.6 |
| 2007 | 711,746 | 525,340 | 186,406 | 26.2 |
| 2008 | 716,803 | 581,597 | 135,206 | 18.9 |
| 2009 | 719,078 | 632,130 | 86,948 | 12.1 |
| 2010 | 768,639 | 646,037 | 122,602 | 15.9 |

(மூலம் : ஹெ.கொ.க.ஆ. மற்றும் ப நிறுவகம்)

மேற்குறித்த தரவுகளைக் கருத்திற்கொள்கையில் உர மானியம் வழங்கப்பட்ட போதிலும் ஒட்டுமொத்தமாக இலங்கையில் கூடியளவு காணியில் பயிரிடப்படும் பெரும் போகத்தின் போதிலும் மேலும் பயிரிடக்கூடிய வயல்காணிகள் பயிரிடப்படாது காணப்பட்டது. மேலும் நெல் பயிரிடப்படாத காணியின் அளவு வருடாந்தம் தளம்பலடைவதைக் காண்பித்தது.

**தெரிவிப்பு:**

உர மானிய வழங்கலின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட முக்கிய நோக்கம், நெல் பயிரிடப்படும் வயல் காணிகளின் அளவை அதிகரித்தலான போதிலும் பயிரிடப்படக்கூடிய எனினும், பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத விளைவற்ற காணிகளின் அளவு ஒவ்வொரு போகத்தின் போதும் காணப்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எய்தப்பட்டிராமை.

**பரிந்துரை:**

(i) வயற்காணிகளின் பெயர் பதிவேட்டுத் திருத்தம் மற்றும் மீளமைப்பின் மூலம் மேலும் சரியான பயிரிடப்படக்கூடிய நில அளவு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு செயற்பட்டு அப் பயிரிடப்படாத காணிகளின் அளவை கூடுதலான அளவில் பயன்படுத்துவதற்காக இயலுமான சகல வகையிலும் விவசாயிகளை ஊக்குவித்தல்.

(ii) நீர்ப்பாசன முறைமையை மேம்படுத்துவதன் மூலம் பயிரிடப்படக்கூடிய காணிகளின் அளவை அதிகரித்தல்.

(iii) வயல் காணிகளை நிரப்புவதை மட்டுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட பிரமாணங்கள் முறைப்படி செயற்படுத்தல்.

**நிறுவகங்களின் கருத்துக்களைத் தெரிவித்தல்**

**கமநல அமைச்சு**

''நாட்டில் நெல் பயிரிடப்படுகையில் ஆகக் குறைந்தது பெரும்போகத்தின் போகத்தின் போது 700,000 ஹெக்டேயரும், சிறு போகத்தின் போது 500,000 ஹெக்டேயருமாக ஒரு வருடத்தின் போது பயிரிடப்படுகின்றது. எனினும், நாட்டில் நிலவிய நெற் பயன்பாட்டு தேவைப்பாட்டிற்காக ஆண்டின் போது 10,000,000 ஹெக்டேயர் வயலில் பயிரிடப்படுவது போதுமானதாகும். இது வரையில் 1,200,000 ஹெக்டேயர் வயல் பயிர்ச்செய்கை காரணமாக நாட்டில் மிகையான நெல் அறுவடை நிலவுகின்றது. ஆகையால் மேலும் நெல் பயிரீட்டு நிலஅளவை அதிகரிப்பதற்காக விவசாயிகளை ஊக்குவிக்கும் தேவைப்பாடு அவசியமற்றதாகும். ஆகையால் சிறுபோகத்தின் போது உலர் வலயங்களில் வேறு களப் பயிர்களுக்கும் ஈரவலயத்தில் மரக்கறி மற்றும் கிழங்குப் பயிர்களுக்கு தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது''.

**கமநல அபிவிருத்தி திணைக்களம்**

i. 1995 இன் பின்னர் கமநலக் காணிகளின் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நாடெங்கிலும் செயற்படும் கமநலக் காணிகளின் மறுசீரமைப்பும் இதற்கு இணையாக விவசாயக் காணிகளின் வகைப்படுத்தலுக்காகப் பயன்படுத்தப்படக்கூடிய கணனிமயமாக்கப்பட்ட தரவு

அடிப்படையை உருவாக்குவதற்கு 2013 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இதற்குரிய செயற்திட்ட அறிக்கை இதற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாறே செயற்கைகோள் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி ஒவ்வொரு நபரிடமும் உள்ள வயற்காணிகளின் சதுர அளவைச் சரியாகக் கணிப்பிடும் அளவீட்டுச் செயற்திட்டமொன்று கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது.

ii. ''நாட்டின் சகல சிறிய நீர்ப்பாசன முறைமைகளையும் மேம்படுத்தவதற்காக செய்வதற்கான படிமுறைத் திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இயற்கை அழிவால் அழிவுற்றிருந்ததைப் போன்று நீண்ட காலம் கைவிடப்பட்டிருந்த ஏற்ற வாவிகளை மீளத் தயாரிப்பதற்காகவும் முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறே நாட்டின் சகல சிறிய நீர்ப்பாசன முறைமையை ஆக்கபூர்வமாக பராமரிப்பதற்காக இத் திணைக்களத்தின் கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் உட்பட கமநல அமைப்புகளை அறிவூட்டல் பயிற்சி நிகழ்ச்சித் தொகுப்புகள் திட்டமிடப்பட்டிருந்ததுடன் இதற்காகத் தயாரிக்கப்பட்ட கைநூல் ஒன்றின் பிரதியும் தெரிந்துகொள்வதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. சிறிய நீர்ப்பாசனத்தின் கீழ் நீர் பாதுகாப்பு உபாயமார்க்கத்தை அறிமுகப்படுத்துவதற்காக கமநலப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத் தொகுப்பை ஆரம்பிப்பதற்குரிய தீர்மானங்கள் 2014 பாதீட்டுத் தீர்மானங்களுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.''

iii. ''வயற்காணிப் பதிவேட்டின் திருத்தத்தின் மூலம் மேலும் பாதுகாக்கப்பட வேண்டிய வயல் காணிகள் சரியாக இனங்காணப்பட்டதை அடுத்து அக் காணிகள் பாதுகாக்கப்படுவதற்குத் தேவையான விசேட நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு இது வரையிலும் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறே எதிர்காலத்தில் இதற்காக செய்தித்தொழிநுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட வரைபடங்களைப் பயன்படுத்துவதற்கும் குறித்த மட்டத்தில் முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

### 3.2 மானிய உரத் தேவைப்பாட்டை மதிப்பிடல், இறக்குமதி செய்தல், பகிர்ந்தளித்தல் மற்றும் பயன்படுத்தல்


#### 3.2.1 இரசாயன உரப் பயன்பாட்டிற்காக முற்படல்

மானிய முறைமையின் கீழ் இரசாயன உர விநியோகிப்பால் நெல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குள்ளான விவசாயிகளும் இரசாயன உரப் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தவது இந் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு நோக்காகும். இது தொடர்பாக பரீட்சிக்கையில் ஒட்டுமொத்தமாக நெல் உற்பத்திக்கான உரப் பயன்பாடு உயர்வடைந்தமை அவதானிக்கப்பட்டது.

| ஆண்டு | விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட மொத்த உர அளவு (மெ.தொ) | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மானிய வழங்கலின் அதிகரிப்பு/(குறைவு) சதவீதமாக |
|---|---|---|
| 2006 | 302,113 | -- |
| 2007 | 352,637 | 16.72 |
| 2008 | 451,231 | 27.96 |
| 2009 | 403,752 | (10.52) |
| 2010 | 466,836 | 15.62 |

(மூலம் : கமநல அபிவிருத்தி திணைக்களம் மற்றும் உர ஏற்றுமதிக் கம்பனிகள்)

## உர விநியோகம்



### 3.2.2 உர இறக்குமதிக்கான அரசாங்கச் செலவினம்

இவ்வாறு உரப் பயன்பாடு உயர்வடையும் அதேவேளை உர இறக்குமதிக்காக அரசாங்கத்தால் ஏற்கப்படும் செலவினமும் வருடாந்தம் உயர்வடைந்தமை அவதானிக்கப்பட்டது. இச் செலவினம் ஆக்கபூர்வமான செலவினமாவதற்கு நாட்டின் நெல் உற்பத்தி அதிகரிப்பின் மூலம் விவசாயிகளின் வாழ்க்கை நிலையை மேம்படுவதும் இரசாயன உரப் பயன்பாட்டின் காரணமாக சுற்றாடல் ரீதியாக சாதகமான நிலையொன்று நாட்டில் ஏற்படுத்தப்பட வேண்டும். உர இறக்குமதிச் செலவினம் தொடர்பாக கடந்த ஆண்டுகள் சிலவற்றின் தகவல்கள் பின்வருமாறாகக் காணப்பட்டன.

| ஆண்டு | இறக்குமதிச் செலவினம் |
|---|---|
| | ரூபா மில் |
| 2005 | 551.7 |
| 2006 | 10,052.7 |
| 2007 | 19,224.9 |
| 2008 | 44,097.6 |
| 2009 | 14,710.9 |
| 2010 | 25,152.9 |

மூலம் : கொழும்பு கொமர்ஷல் மற்றும் லக் பொஹொர கம்பனி

### 3.2.3 மதிப்பிடல்

உள்ளீட்டுத் தேவைப்பாடாக உர இறக்குமதிக்காக அரசாங்கத்தால் பாரிய செலவினத்தை ஏற்பதனால் ஆரம்பத்திலிருந்து தேவையான உர அளவைச் சரியாக மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இங்கு தேசிய உரச் செயலகத்திற்குக் கிடைக்கப்பெறும் தகவலின் அடிப்படையில் போகத்திற்குத் தேவையான உர அளவு மதிப்பிடப்படுகின்றது. இதற்குரிய அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) நெற்பயிர்ச்செய்கைக்காக மானிய உரப் பகிர்வு தொடர்பாக அமைச்சுச் செயலளரால் உரிய பயிர்ச்செய்கை போகத்திற்காக

விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் பயிர்ச்செய்கை போகத்தின் உர வழங்கல் பூர்த்திசெய்யப்பட்ட நாள்முதல் இரு கிழமைகளுக்குள் உரப் பகிர்வு முன்னேற்றத்தைக் காண்பித்து உரிய அறிக்கைகள் கமநல அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தர்களால் தேசிய உரங்கள் செயலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் உரிய உத்தியோகத்தர்களால் அவ்வறிக்கை குறித்த தினத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கோ அல்லது அவ்வாறில்லாவிடில் எவ்வகையிலும் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் நிலவுவது அவதானிக்கப்பட்டது. 2009 சிறுபோகம் முதல் 2010/2011 பெரும்போகம் வரையான 04 பயிர்ச்செய்கை போகத்திற்குரித்தான இவ் அறிக்கை பெற்றுக்கொள்ளப்படும் முன்னேற்றத்தைப் பரீட்சிக்கையில் 553 கமநல சேவைகள் நிலையங்களில் 2009 சிறு போகத்தில் 166 நிலையங்களினதும் 2009/2010 பெரும்போகத்தில் 216 நிலையங்களினதும் 2010 பெரும்போகத்தில் 134 நிலையங்களினதும், 2010/2011 சிறு போகத்தில் 98 நிலையங்களினதும் அறிக்கை 2012 ஏப்ரல் 04 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெரிவுகளாக அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் குருநாகல் போன்ற மாவட்டங்களில் 106 கமநல சேவைகள் நிலையங்கள், 2008/2009 பெரும்போகம் முதல் 2011 சிறுபோகம் வரை 06 பயிர்ச்செய்கைப் போகங்களுக்குரித்தான அறிக்கை பெற்றுக்கொள்ளப்படும் முன்னேற்றம் கருத்திற்கொள்கையில் 2008/2009 பெரும்போகத்தில் 03 நிலையங்களிலிருந்தும் 2009 சிறு போகத்தின் 81 நிலையங்களிலிருந்தும் 2009/2010 பெரும் போகத்தின் 20 நிலையங்களிலிருந்தும் 2010 சிறு போகத்தின் 32 நிலையங்களிலிருந்தும் 2010/2011 பெரும் போகத்தின் 65 நிலையங்களிலிருந்தும் 2011 சிறு போகத்தின் 71 நிலையங்களிலிருந்துமாக குறைவான அறிக்கைகள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் குறித்த தினத்தில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அடுத்த பயிர்ச்செய்கை போகத்திற்காக தேவையான குறித்த உரத் தேவைப்பாடு தீர்மானிக்கப்படுவதற்கு தேசிய உரச் செயலகத்திற்கு இயலாதிருந்தது.

(இ) ஒவ்வொரு போகத்திற்குமாக உரிய மாவட்டங்களுக்குத் தேவையான உர அளவு மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழுவால் உரிய அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டு குறிப்பாகக் குறித்த தினத்திற்கு முன் தேசிய உரங்கள் செயலக அலுவலகத்திற்கு அறிவிக்க வேண்டும். எவ்வாறெனினும், 2012 சிறு போக மற்றும் 2011/2012 பெரும் போகத்திற்குரித்தான கொழும்பு மாவட்டத்தின் உர ஒருங்கிணைப்புக் கூட்டத்தை நடாத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் 2012 சிறு போகத்திற்குரித்தான அம்பாறை மற்றும் அநுராதபுர மாவட்டங்களின் அறிக்கைகளை அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனவும் அதன் காரணமாக உரத் தேவைப்பாடு முறைப்படி திட்டமிடப்படுவதற்கு இடையூறு ஏற்பட்டதாகவும் அவதானிக்கப்பட்டது. இங்கு 2011/2012 பெரும்போகத்திற்காக 21 மாவட்டங்களிலிருந்தும் 2012 இன் சிறுபோகத்திற்காக 15 மாவட்டங்களாலும் குறித்த தினத்திற்கு முன்னர் உரிய அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

### 3.2.4 மானிய உரக் கொள்வனவு

தேசிய உரச் செயலகங்களால் இவ் உர இறக்குமதி செய்யப்படுவதற்கான உரிமை இரு அரச கம்பனிகளான வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனிக்கு 65 சதவீதமும் வரையறுக்கப்பட்ட இலங்கை கொமர்ஷல் உரக் கம்பனிக்கு 35 சதவீதமுமாக ஒப்படைக்கப்பட்டிருந்தது. கம்பனிகளின் மூலம் உர இறக்குமதி தொடர்பான ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) மானிய உரக் கொள்வனவு நடைமுறைகளுக்குரிய கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சரிடமிருந்து கோரப்பட்ட தகவல்கள் 2013 யூலை 31 வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதமையால் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பது குறித்து கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் மார்ச் மாதமளவில் உர மானியங்களைத் தருவிப்பதில் திறைசேரியால் தேவையான பணம் உரிய காலத்தில்

விடுவிக்கப்பட்டிராமையால் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனிக்கு ரூபா 3,226 மில்லியன் தொகையும் கொழும்பு உரக் கம்பனிக்கு ரூபா 5,370 மில்லியன் தொகையுமாக ரூபா 8,596 மில்லியன் கூட்டுத்தொகை செலுத்த வேண்டியிருந்தது.

(இ) மேலே(ஆ) பந்தியில் காண்பிக்கப்பட்ட பொறுப்புகளுக்காக 2011 ஆம் ஆண்டின் சனவரி முதல் 2012 மார்ச் வரையான காலப்பகுதியின் போது கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனிக்கு ரூபா 883 மில்லியன் தொகையும் 2011 மார்ச் முதல் 2012 ஏப்ரல் வரையான காலப்பகுதிக்காக இலங்கை உரக்கம்பனிக்கு ரூபா 1,134 மில்லியனாக ரூபா 2,017 மில்லியன் கூட்டுத்தொகையான வட்டியும் அரசாங்கத்திற்குச் செலுத்த நேர்ந்தது.

(ஈ) உர இறக்குமதியில் ஈடுபட்டிருக்கும் கம்பனி மற்றும் உர இறக்குமதி செய்யும் ஒப்பந்க் கம்பனிகளுக்கிடையே கொள்வனவு நடைமுறையில் ஏற்பட்ட குறைபாடுகளில் ஏற்பட்ட சில சிக்கல்கள் தீர்வு நடைமுறைகளுக்காகத் தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காகச் சட்டக் கட்டணங்களும் ஏனைய செலவினமுமாக ரூபா 8,784,356 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2012 மே 17 ஆம் திகதி வரை கொடுப்பனவு செய்ய நேர்ந்ததுடன் இறுதி முடிவிற்கு வந்திருக்கவில்லை.

### 3.2.5 பதிவேடுகளும் இருப்பு அறிக்கைகளும் பேணப்படல்

உர நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக பேணப்பட்ட அறிக்கைகள் மற்றும் ஏனைய பதிவேடுகள் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகக் காணப்பட்டன.

(அ) உர மானிய நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுவது தொடர்பாக அமைச்சுச் செயலாளர் வருடாந்தம் விநியோகிக்கப்படும் சுற்றறிக்கையின் படி விவசாயிகளுக்கு மானிய உரங்களை விற்பனை செய்வதற்கான பொறுப்பை ஏற்கும் விவசாய அமைப்புக் குழுக்கள் மற்றும் அச் செயற்பாட்டிற்கான முன்னங்கீகாரத்தைப் பெற்றுள்ள சகல நிறுவனங்களாலும் பெற்றுக்கொள்ளப்பட்ட உர வகைகள் மற்றும் அளவு, களஞ்சியப்படுத்தப்பட்ட இடம், உரங்களை விநியோகித்த விவசாயிகளின் பெயர், அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரிகள் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் வழங்கப்பட்ட உரத்தின் அளவு மற்றும் அதற்குரித்தான வயற்காணிகளின் அளவைக் காண்பிக்கும் பதிவேட்டை நாளாந்தம் நாளதுவரையாக்கிப்

பேணல் வேண்டும். எவ்வாறெனினும், கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டவாறு கமநல சேவைகள் நிலையத்தால் பேணப்பட்ட அவ்வறிக்கை மற்றும் பதிவேடுகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

i. சில கமநல சேவைகள் நிலையங்களால் தொடக்க ஆண்டுகளின் போது உரப் பகிவுப் பதிவேடுகளில் அடையாள அட்டை இலக்கம் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் பின்னர் அவ் அடையாள அட்டை இலக்கம் பதிவு செய்யப்படும் நிரல் உரிய பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டமை.

ii. உர விண்ணப்பப் படிவங்களை விவசாய அமைப்புகள் பரிந்துரைக்காமை.

iii. விண்ணப்பப் படிவம் கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களால் பரிந்துரைக்கப்பட்டிராமை.

iv. விண்ணப்பப் படிவத்தில் தமக்குரித்தான உரத்தின் அளவு உள்ளடக்கப்பட்டிராமை.

v. விண்ணப்பப் படிவம் கமநல அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டிராமை.

vi. மானிய உர விநியோகப் பதிவேட்டில் விவசாயிகளின் கையொப்பம் இன்மை.

vii. பிரிவு, தேசிய அடையாள அட்டை இலக்கம், பற்றுச்சீட்டு இலக்கம் ஆகியவை காண்பிக்கப்பட்டிராமை.

viii. விண்ணப்பப் படிவ தொடர் இலக்கம் தொடர்ச்சியாக பிணைக்கப்பட்டிராமை.

ix. உரம் விநியோகிக்கப்படும் பதிவேட்டின் கையொப்பத்திற்கும் உர விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட விவசாயிகளின் கையொப்பத்திற்கும் இடையே தெளிவான வேறுபாடுகள் நிலவின.

x. உரம் பெறப்படும் விண்ணப்பங்களில் சில விவசாயிகள் கையொப்பமிட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) மானிய அடிப்படையின் கீழ் அரசாங்கத்தால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வயல் உரங்கள் அரசாங்கத்தால் பாரியளவு செலவினம் ஏற்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டமையால் அவ் இருப்புத் தொடர்பாக போதிய கட்டுப்பாடொன்றைப் பேணுவது உரம் தொடர்பான பொறுப்பை ஏற்கும் சகல நிறுவகங்களினதும் பொறுப்பாகும். உரிய கமநல சேவை நிலையங்களால் பயிரீட்டுப் போகத்தின் முடிவில் தம்மால் விநியோகிக்கப்பட்ட உர இருப்பு, விவசாயிகளுக்கு வழங்கப்படல் மற்றும் கையில் எஞ்சியுள்ள இருப்புத் தொடர்பாக தேசிய உரங்கள் செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலை இல. 05'' அறிக்கைகளின் படி பெரும்பாலான கமநல சேவைகள் நிலையங்களின் ஒரு போகத்தின் முடிவில் எஞ்சியிருக்கும் என குறிப்பிடப்பட்ட இருப்பு அடுத்துவரும் போகம் தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையின் ஆரம்ப இருப்புடன் இணங்கியிராமையால் கமநல சேவைகள் நிலையத்தின் பொறுப்பிலுள்ள இருப்புத் தொடர்பாக முறையான இருப்புக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(இ) ஒவ்வொரு கமநல சேவைகள் நிலையங்களின் உரத் தேவைப்பாடானது உாயி நிலையங்களின் கீழ் உள்ள வயற்காணிகளை இனங்காணும் பதிவேடு தற்போது கமநல அபிவிருத்தி பிரதேச அலுவலகர்களால் உறுதிப்படுத்தி நேரடியாக அனுப்பி வைக்கப்படும் பட்டோலை 5 படிவம் அல்லது அவர்களால் உரிய மாவட்ட ஆணையாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் காணி அளவிற்குரிய தகவல்களைச் அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது.

எனினும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 53 ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு கமநல அபிவிருத்திச் சங்கத்தினாலும் சுய அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திற்குள் கமநலக் காணிகள் தொடர்பான பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு திருத்தம் மற்றும் மீளமைப்பு செய்யப்பட்டு பேணப்பட வேண்டியதுடன் அதன் முதல் பதிவேடு ஆணையாளர் நாயக அலுவலகத்தினூடாக தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறெனும், அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் குருநாகல் மாவட்ட கமநல சேவைகள் நிலையங்களுக்குரித்தாக அப் பகுதிகளின் வயற்காணிகள் பெயர்ப்பதிவேடு 10 ஆண்டு காலமாக திருத்தம் செய்வதற்கு

நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை பரீட்சிப்பின்போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் படி, 2008/2009 பெரும் போகத்திலிருந்து 2012 சிறு போகம் வரை (சகல போகங்களினதும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை) குருநாகல் மாவட்டத்தின் இரண்டு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கம்பனியின் மூலம் 3,278,161 கி.கி மானிய உரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக எவ்வித முன்னேற்ற அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**மதிப்பீடு**

i. உரத் தேவைப்பாடு சரியாக எதிர்வுகூறப்படுவதற்கு முடியாதிருந்தமை.

ii. தேவைப்பாடு முறைப்படி இனங்காணப்பட்டிராத காரணத்தால் அனாவசியமாக உரம் இறக்குமதி செய்யப்பட்டு அனாவசியமான உர மிகை ஏற்பட்டமை மற்றும் இதன் காரணமாக உர இறக்குமதிக்காக பாரிய கிரயமும் ஏற்கப்பட நேர்ந்தது.

iii. மானிய உரங்கள் உரிய நலன் பெறுனர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படும் நடைமுறை முறைப்படி செயற்பட்டிராத காரணத்தால் பல்வேறு முறைகேடுகளும் மானிய உரத்திற்குத் தகமையற்ற தரப்பினருக்கு மானியம் முறையற்ற விதத்தில் அனுபவிப்பதற்கு இருந்தமையால் அரசாங்கத்திற்குத் தேவையற்ற செலவினத்தை ஏற்க வேண்டியிருந்தது.

**பரிந்துரைகள்**

i. மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழு கமநல சேவைகள் நிலையத்தினூடாக விவசாயிகளிடமிருந்து சரியான உரத் தேவைப்பாடு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இது தொடர்பாக சகல பொறுப்புவாய்ந்த தரப்பினரையும் அறிவூட்டல்.

ii. மானியத்திற்காக விநியோகிக்கப்பட்டுள்ள சகல சுற்றறிக்கைகளினதும் தேவைப்பாடு குறித்த வகையில் பின்பற்றப்படுவதற்குப் பொறுப்பாக இருத்தல்.

iii. தொடர் மதிப்பீட்டு நடைமுறை செயற்படுத்தப்பட வேண்டியதுடன் தேசிய உரங்கள் செயலகம், கமநல சேவைகள் மாவட்ட அலுவலகத்தினூடாக தொடர்ச்சியான நெறிப்படுத்தல்கள் மற்றும் கண்காணிப்பு நடைமுறை மூலம் உரிய சகல படிமுறைகளினதும் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல்.

iv. குறித்த வேலை ஒப்படைப்பைப் போன்று முறையான அறிக்கையிடல் நடைமுறையும் அத்தியாவசியமாகும். முறைப்படியான உள்ளகக் கணக்காய்வு நடைமுறையைச் செயற்படுத்துவதன் மூலம் மேற்குறித்த குறைபாட்டைத் தவிர்த்துக் கொள்ளல்.

v. வயல் காணிகளின் பெயர்ப்பட்டியலை நாளதுவரையாக்கல்.

**நிறுவகங்களின் கருத்துத் தெரிவிப்பு**

**கமநல அபிவிருத்தி திணைக்களம்**

மானிய உரங்களை கட்டளையிடல், பெற்றுக்கொள்ளல் மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பான அறிக்கைகளைப் பேணல் மற்றும் அத் தகவல்களை உரிய வகையில் குறித்த நிறுவகத்திற்கு வழங்கல் தொடர்பாக உர சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரமும் திணைக்களச் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரமும் செயற்படுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்குக் கடிதத்தின் மூலம் தொடர்ச்சியான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதுடன் குறிப்பாக நிலையத்தில் நிலவும் ஊழியர் பற்றாக்குறை காரணமாக ஏற்படும் இக்குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**கமநல அமைச்சு**

(i) ‘‘கமநல சேவைகள் நிலையங்களின் மட்டத்தில் இனங்காணப்பட்ட வயல் காணிகளின் அளவு மற்றும் சரியான தன்மையை பரீட்சித்து, உரப் பகிர்வை முறைப்படி கண்காணிப்பதற்காக கமநல அமைச்சின் 53 உதவிப் பணிப்பாளர்கள் மாவட்ட மட்டத்தில் தெரிவுப் பரிசோதனையின் மூலம் பயிரிடப்படும் வயல் காணிகளின் அளவின் சரியான தன்மையைப் பரீட்சிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கமநல

அமைப்பு முகவர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களும் களத்துறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ii) ‘‘களத்தில் பகிர்ந்தளிக்கப்படும் உர அளவில் களஞ்சியத்தில் நிலவும் உர இருப்பின் நிலை தொடர்பாக தொடர்ச்சியாக அவதானிப்பதற்காக விசேட கடமைகளை தேசிய உரச் செயலகத்தின் கள மட்டத்தில் உதவிப் பணிப்பாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டதுடன் அத் தகவல் தலைமை அலுவலகத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்டு உரத்தின் இருப்பு பகிர்ந்தளிக்கப்படுவது தொடர்பாக தொடர்ச்சியான மதிப்பீட்டு நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.’’

(iii) ‘‘களத்தில் விவசாயிகளுக்கிடையே உரங்களைப் பகிர்வதற்கான நடவடிக்கைகள் கமநல அமைப்புகளுக்கு ஒப்படைக்கப்படுவதற்கு அச் செயற்பாடு கமநல சேவைகள் நிலையங்களின் மட்டத்தில் கண்காணிக்கப்படுவதற்காக கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களுடாக மேற்கொள்ளப்படுவதற்கும் மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் கண்காணிப்பை தேசிய உர செயலகத்தின் உதவிப் பணிப்பாளர்களுடாக மேற்கொள்ளப்படுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது’’.

(iv) ’’தேசிய உரச் செயலகத்தால் உரப் பகிர்விற்கு அவசியமான சுற்றறிக்கைகள் ஒவ்வொரு போகத்தின் ஆரம்பத்திற்கு முன்னரும் விநியோகிக்கப்படுகின்றன. உரிய சுற்றறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு கமநல சேவைகள் நிலையங்களின் மூலம் உரம் பகிரப்படுகின்றது. இவ்வாறே சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு பட்டோலை இல. 05 உரிய படிவம் நிரப்பப்பட்டு மீள தேசிய உர செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியதுடன் அடுத்த போகத்தின் போது அவ் அதிகாரப் பிரதேசத்தில் வயல் காணிகளின் அளவு, நிலவும் இருப்பு நிலை மற்றும் உரிய ஏனைய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அடுத்த போகத்திற்குத் தேவையான உரப் பகிர்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறே, கணக்காய்வின் போது உங்களால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளுடனான பதிவேடு மாவட்ட உதவிப் பணிப்பாளர்களின் அவதானிப்பிற்கு உட்டுத்துமாறு மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.’’

### 3.3 உரத்திற்கான விண்ணப்பம்

### 3.3.1 உர விண்ணப்பத்திற்கான கமநல சேவைகள் நிலையங்களின் செயற்பாடு

கமநல சேவைகள் நிலையங்களுக்குரித்தான சகல விவசாயிகளினதும் உரத் தேவைப்பாட்டின் பேரில் உரிய கமநல சேவை நிலையத்தின் உரத் தேவைப்பாடு தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் நிலையங்களில் தேவைப்பாட்டினால் கூட்டி நாட்டின ஒட்டுமொத்த உரத் தேவைப்பாடு தீர்மானிக்கப்பட வேண்டும். மேற்குறித்த செயற்பாடு சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது குறித்து பரீட்சிக்கப்படுகையில் பெரும்பாலான கமநல சேவை நிலையங்கள் விவசாயிகளின் உரத் தேவைப்பாட்டை கருத்திற்கொள்ளாது உரத்திற்காக விண்ண்ப்பித்து பின்வரும் விடயங்களின் படி அவதானிக்கப்பட்டது.

(அ) உரத் தேவைப்பாட்டைத் தீர்மானிப்பதற்காகக குறித்த நியதிகளின்மை

உ+ம் (i) குருநாகல் மாவட்டத்தின் வெல்லவ கமநல சேவைகள் நிலையத்திற்குரித்தான 17 கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பிரிவுகளிற்காக 2010 சிறு போகத்திற்கு உரக் கோரல்கள் விவசாயிகளின் தேவைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டல்லாது அறுவடை செய்யக்கூடிய ஒட்டுமொத்த வயலின் அளவை அறுவடையாக்கொண்டே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) தம்புல்ல கமநல சேவைகள் நிலையத்திற்குரித்தான 41 கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பிரிவுகளிற்காக 2012 சிறு போகத்திற்காக உரக் கோரல் முன்னைய போகங்களில் பயிரிடப்பட்ட ஏக்கர் அளவு மற்றும் பிரிவுகளின் மட்டத்தில் கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட ஏக்கர் அளவு தீர்மானிக்கப்படுவதன் மூலமாகும்.

(ஆ) நிச்சயிக்கப்பட்ட தேவைப்பாடு யதார்த்தமில்லாது போதல்

உ+ம் : 2010/2011 பெரும் போகத்திற்குரித்தான அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் குருநாகல் போன்ற 03 மாவட்டங்களில் தேசிய உரங்கள் செயலகத்திற்கு

அனுப்பிவைக்கப்பட்ட 5 பட்டோலைப் படிவங்களை பரீட்சிக்கையில் பின்வருமாறு அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் குருநாகல் போன்ற மாவட்டங்களில் 163,716.18 ஹெக்டேயர் வயலுக்காக 74,812.52 மெ.தொ. கோரப்பட்டிருந்த போதிலும் அப் போகத்தில் உள்ளபடியாக 03 மாவட்டங்களில் பயிரிடப்பட்ட நில அளவு 141,497.97 ஹெக்டேயர்களானதுடன் பயன்படுத்தப்பட்ட உரத்தின் அளவு 59,904.40 மெ.தொன்களாகும். இதன் படி இலக்கிடப்பட்ட 22,218.21 ஹெக்டேயர் வயலுக்காக இறக்குமதி செய்யப்பட்ட 14,908.20 மெ.தொ (மீதி கோரப்பட்ட அளவில் 19.9 சதவீதமாகக் காணப்பட்டது) அப் போகத்தில் மிகையாகக் காணப்பட்டது.


**3.3.2 தேவைப்பாட்டிலும் பார்க்கக்கூடிய உரத்தைக் கோரல், தேவைப்பாட்டிலும் பார்க்கக்கூடிய உரத்தைக் கோரியிருந்தமையால் பின்வரும் நிலைமைகள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.**

i. கோரப்பட்ட உரத்தின் அளவு தேவைப்பாட்டிலும் பார்க்க அதிகரித்ததன் காரணமாக பிராந்திய களஞ்சியங்களில்/ நிலையங்களில் உரத்தின் இருப்பு எஞ்சியிருந்தமை.

ii. தேசிய உரச் செயலகத்தின் கோவைகளைப் பரீட்சிக்கையில் கண்டறியப்பட்டவாறு மானியமாக விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்குக் கொண்டுவரப்பட்ட ரூபா 67,401,600 பெறுமதியான 62,023 கி.கி. யூரியா 80,446 கி.கி எம்.ஓ.பீ. 50,107 கி.கி. ரீ.எஸ்.பீ. பல்வேறு மோசடிகள் காரணமாக முறைப்பாடுகள் பெறப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக உரிய காலப்பகுதியின் போது விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட முடியாதிருந்தது.

iii. உர மானியம் ஆரம்பிக்கப்பட்ட 2006 ஆம் ஆண்டு முதல் உரிய உரக் கம்பனிகள் இரண்டினால் ஒவ்வொரு ஆண்டுகளின் போதும் இறக்குமதி செய்யப்பட்ட மொத்த மானிய உர அளவு (யூரியா, ரீ.எஸ்.பீ.எம்.ஓ.பீ) மற்றும் கமநல சேவைகள் நிலையங்களால் உரிய ஆண்டுகளில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த உர மானியம் உர அளவுடன் ஒப்பிடும் போது ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் நாட்டில் எஞ்சும் மொத்த உரத்தின் அளவு படிப்படியாக

உயர்வடைந்துள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. (இங்கு நாட்டில் எஞ்சும் மொத்த உரத்தின் அளவு என்பது உரக் கம்பனிக்கும் கமநல சேவை நிலையங்களுக்குரிய போகங்கள் இரண்டின் இறுதியிலும் எஞ்சும் மொத்த உரத்தின் அளவாகும்.) விபரம் பின்வருமாறாகும்.




மூலம் : உர ஏற்றுமதிக் கம்பனிகள் மற்றும் விசாய அபிவிருத்தி திணைக்களம்

| ஆண்டு | இறக்குமதி செய்யப்படும் உரத்தின் அளவு (கொ.கொ. உ+ம்) லக் பொ) | விவசாயிகளுக்கு வழுங்கப்பட்ட உர அளவு | ஒவ். ஆண்டின் இறுதியிலும் நாட்டில் எஞ்சும் உரத்தின் அளவு (ஆரம்ப இருப்பு + இறக்குமதி – விவசாயிகளுக்கு வழங்கல்) | எஞ்சிய உர இருப்பு இறக்குமதி செய்யப்படும் உரத்தின் இருப்பின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | **மெட்ரிக் தொன்** | **மெட்ரிக் தொன்** | **மெட்ரிக் தொன்** | |
| 2006 | 349,878 | 302,113 | 47,765 | 13.65 |
| 2007 | 404,206 | 352,637 | 99,334 | 24.57 |
| 2008 | 582,168 | 451,231 | 230,271 | 39.55 |
| 2009 | 341,615 | 403,752 | 168,134 | 49.21 |
| 2010 | 502,366 | 466,836 | 203,664 | 40.5 |
| 2011 | 547,104 | -- | -- | -- |

மூலம் : உர இறக்குமதி கம்பனிகள் மற்றும் விவசாய அபிவிருத்தி திணைக்களம்

iv. படிப்படியாக நாட்டில் எஞ்சும் உரத்தின் அளவு உயர்வடைவதாகவும், தேவையான அளவைப் பார்க்கிலும் மிகையான இருப்பொன்று ஒவ்வொரு ஆண்டின் போதும் நாட்டில் நிலவுவதாகவும் மேற்குறித்த தரவின் படி அவதானிக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக 2010 ஆம்

ஆண்டின் போது நாட்டின் மொத்த மானிய வயல் உரப் பயன்பாடு 466,836 மெ.தொன்களாகும். இதன் படி, ஆண்டின் இறுதியில் இரு கம்பனிகளினதும் உரங்களின் மீதி 203,664 மெ.தொன்களாகும். எனினும், 2011 ஆம் ஆண்டி போது மேலும் 547,104 மெ.தொ. உரத்திற்காக இறக்குமதி செய்யப்பட்டிருந்தமையால் 2011 ஆம் ஆண்டின் போது மொத்த உர ஒதுக்கம் 750,768 மெ.தொன்னாகக் காணப்பட்டது. இது 2010 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த உரப் பயன்பாட்டைப் பார்க்கிலும் 283,932 மெ.தொ. உரத்தின் அதிகரிப்பாகும். எவ்வாறாயினும், தேசிய உரச் செயலகத்தின் உர இறக்குமதி முறையின் படி இலங்கையில் உரப் பற்றாக்குறை அல்லது மிகை ஏற்படாதவாறும் திடீர் தேவைப்பாட்டின் போது பயன்படுத்தப்படுவதற்காக பாதுகாப்பு இருப்பொன்று நிலவுவதாகவும் உரக் கம்பனிகளின் இருப்பைப் பயன்படுத்தும் சுழற்சியைக் கருத்திற்கொண்டு வருடாந்தம் இறக்குமதி செய்யப்பட வேண்டிய மற்றும் ஏதேனுமோர் தருணத்தில் பேணப்பட வேண்டிய உரத்தின் இருப்பின் அளவு, ஒவ்வொரு உரக் கம்பனிக்கும் ஒதுக்கி வழங்கப்பட வேண்டியவை போன்ற தேவைப்பாட்டிற்கு மாறாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டின் போது எஞ்சிய இருப்பு, உர இறக்குமதி மற்றும் விவசாயிகளுக்கு உரம் வழங்கப்படுவதைக் கருத்திற்கொள்கையில் இத் தேவைப்பாட்டிற்கு மேலாக உரம் 156,980 மெ.தொன் நாட்டின் அனாவசியமான பேணப்பட்டு வந்துள்ளது. விபரம் பின்வருமாறாகும்.

| | | உர<br>மெ.தொ<br>----------------<br>மெட்ரிக் மொன் |
|---|---|---|
| 2010 ஆரம்ப எஞ்சிய இருப்பு | | |
| கூட்டு: 2010 இறக்குமதிகள் | | 168,134 |
| | | 502,366 |
| | | ----------- |
| 2010 நாட்டில் இருந்த மொத்த உரத்தின் அளவு | | 670,500 |
| கழி: 2010 இன் உரத்தின் வழங்கல் | 466,836 | |
| + 10% பாதுகாப்பு இருப்பு | 46,683 | |
| | ----------- | |
| மொத்த தேவைப்பாடு | | (513,519) |
| | | -------------- |
| வீணாக பேணப்பட்ட இருப்பு மீதி | | 156,981 |
| | | ======== |

**தெரிவிப்புகள்**

i. நாட்டில் அனாவசியமாக உர இருப்பு நிலவுதல்.

ii. அவ் அனாவசியமான இருப்பில் மிகப் பாரியளவிலான அன்னிய செலாவணி அளவு உட்பட்டிருந்தமை.

iii. உரத்தின் இறக்குமதிக் கம்பனிகளின் உரங்களைக் களஞ்சியப்படுத்தும் முறையின் படி இருப்பு காலாவதியாதல் மற்றும் தாக்கம் அதிகரித்தல்.

iv. உரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவதற்கு இடமளித்தல்.

v. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான தீர்மானங்கள் எடுக்கப்படுகையிலும் உர நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல் அளவீட்டின் போதும் தவறான விளக்கமளிக்கப்படுவதற்கு இடமிருத்தல்.

**பரிந்துரைகள்**

i. ஒவ்வொரு போகத்தின் போதோ அல்லது ஆண்டிற்குத் தேவையான உரத்தின் அளவு போதியளவில் சரியாக மதிப்பிடப்படக்கூடிய வகையில் உரங்களை வழங்கும் முறைமையைத் தயாரித்தல். (பயிரிடப்படும் நிலத்தின் அளவு போதியளவு சரியாக நிச்சயிக்கப்பட்டு கணிப்பிடல்.)

ii. நெற் செய்கைக்காக விநியோகிக்கப்படுவதற்குத் தேவையான உரத்தின் அளவும் பாதுகாப்பு இருப்பான உரத்தின் இருப்பைப் பேணுவதற்காக போதியளவில் ஒவ்வொரு கம்பனிக்கும் சரியான இறக்குமதி அளவுகளை ஒதுக்கிக் கொடுத்தல்.

**நிறுவகங்களின் கருத்துக்களைத் தெரிவிப்பு**

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

“உரத்தின் தேவைப்பாட்டை சரியாகக் கணிப்பிடுவதில் நிலவும் குறைபாடுகளைத் தவிர்த்துக்கொள்வதற்காக போதியளவில் போகத்திற்கான கூட்டத் தீர்மானங்களின் அடிப்படையில் எடுக்கப்படும் எதிர்வரும் போகத்தின்

பயிர்ச்செய்கைக் காணிகளின் அளவு, காலப்பகுதி தொடர்பான தீர்மானத்தில் உரங்கள் குறைத்துக் கூட்டப்படுவது மாவட்ட உரக் குழுக்களின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மானிய உரக் கட்டளையிடல், பெற்றுக்கொள்ளல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான அறிக்கையிடல் மற்றும் அத் தகவல்களை உரிய வகையில் உரிய நிறுவகத்திற்கு வழங்கப்படுவது தொடர்பாக உரச் சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரமும் திணைக்களச் சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரமும் நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்குக் கடிதத்தின் மூலம் தொடர்ந்தும் அறிவுறுத்தப்பட்டுவருவதுடன் குறிப்பாக நிலையத்திலுள்ள ஊழியர் பற்றாக்குறை காரணமாக ஏற்படும் இந் நலிவுகளைத் தவிர்ப்பதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**விவசாய அமைச்சு**

“நெல் மற்றும் ஏனைய பயிரினங்களைப் பயிரிடும் காணி அளவுகள் மாவட்ட மட்டத்தில் சரியாக கணிப்பிடப்படுவதற்காக தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளருக்கு கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது வரையிலும் அவர்கள் ஒவ்வொரு மாவட்டங்களுக்குரித்தான பயிர்ச்செய்கைக் காணி அளவுகளைச் சரியாக இனங்காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறே, நெல் செய்கைக்கு உரித்தான கடந்த ஆண்டுகளுக்குரித்தான தரவுகளை அடிப்படையாக் கொண்டு பெரும் போகத்தில் 700,000 ஹெக்டேயரும் சிறு போகத்தில் 500,000 ஹெக்டேயர்களுமாக நெல் செய்கை நில அளவை மட்டுப்படுத்தி உரத் தேவைப்பாட்டைக் கணிப்பிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது 2013/2014 பெரும் போகம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறே தேசிய உரச் செயலகத்தால் உரத் தேவைப்பாட்டு மதிப்பீடானது, கமநல சேவைகள் நிலையத்தால் தவணை முறையில் பெற்றுக்கொள்ளப்படும் வயல் காணிகள் ஹெக்டேயர் அளவு மற்றும் அவ் அதிகாரப் பகுதிக்குத் தாக்கமளிக்கும் உரப் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது.

மேற்குறித்த காரணத்தால் உங்களால் கணக்காய்வு செய்யப்படும் தகவலிற்கிணங்க 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை எஞ்சிய உர இருப்பு நிலை, அதிகரிப்பு நிலவுவதற்குக் காரணமான முக்கிய காரணியாக,

i. உரிய அதிகாரப் பிரதேசத்தில் வயல் காணிகளின் பெயர்ப்பதிவேடு முறைப்படி நாளதுவரையாக்கப்பட்டிராமையால் அவ் அதிகாரப் பிரதேசத்தில் நிலவும் மொத்த காணி அளவிற்கும் உரத்தைக் கோருவது பிரதான காரணமாகும்.

ii. அரசாங்கத்தின் பிரதான களஞ்சியங்களில் நிலவும் இயலளவு போதாமையின் காரணமாக போகம் ஒன்று ஆரம்பிக்கப்பட முன்னர் கமநல சேவைகள் நிலையங்களில் நிலவும் பிராந்தியக் களஞ்சியங்களைப் பயன்படுத்தியமையாலும் பிராந்தியக் களஞ்சியங்களில் உர ஒதுக்கத்தில் மிகை ஏற்படக் காரணமாகியிருந்தது.

iii. இலங்கை போன்ற நாடுகளில் உரம் உற்பத்தி செய்யப்படாமையால் போகம் ஆரம்பிக்கப்பட முன்னர் மொத்த உரத்தின் தேவைப்பாடு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக இலங்கைக்குத் தாக்கமளிக்கும் காலநிலைக் காரணிகளில் சிறிய மற்றும் பெரும் போகங்கள் ஆரம்பிக்கப்படுவது உரிய காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டிராமையால் உரிய பிராந்திய களஞ்சியங்களில் உர மிகைகள் பேணப்படுவது அத்தியாவசியமாகும்.

iv. இலங்கை போன்ற நாடுகளில் நிலவும் பல்வேறு காலநிலைக் காரணிகளான அதிக மழை, வெள்ளம், வரட்சி போன்ற காரணத்தால் உரிய விவசாயிகள் போகத்தைக் கைவிட்டு பயிர்செய்கையை மேற்கொள்ளாது கைவிடுவதற்குத் தீர்மானிப்பதன் மூலம் பிராந்தியக் களஞ்சியங்களில் உரத்தின் இருப்பு மிகை ஏற்படக் காரணியாகியிருக்கக்கூடும்.''

## 3.4 உரப் பரிந்துரைகள்

### 3.4.1 உரப் பரிந்துரைகள் செயற்படுத்தப்படல்

கமநலத் திணைக்களத்தின் கீழ் உள்ள நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தால் நெல் செய்கையால் ஆகக் கூடிய

அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய கமநல காலநிலை வலயம் மற்றும் நீர்ப்பாசன முறையை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்தப்பட வேண்டியதாகப் பரிந்துரைக்கப்பட்ட இரசாயன உரத்தின் அளவை அவ்வாறே பயன்படுத்துவதா என்பது குறித்து 2010/2011 பெரும்போகத்திற்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகக் காணப்பட்டன.

(அ) உள்ளவாறாகப் பயிரிடப்படும் நில அளவிற்குரித்தான உரத்தின் பரிந்துரைகள் அவ்வாறே பயன்படுத்தப்பட்டதா என்பது குறித்து தெரிவுக் கணக்காய்வு, பரீட்சிப்பிற்குட்படுத்தப்பட்ட 3 மாவட்டங்களுக்குரித்தான 59 நிலையங்கள் குறித்த பரிந்துரைக்கப்பட்ட உர அளவைப் பயன்படுத்தியிராமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) விநியோகிக்கப்படும் உரத்தின் அளவு குறித்த தரத்தில், குறித்த அளவிடையில், குறித்த காலத்திலும் குறித்த பயிரிற்குப் பயன்படுத்தப்படுவதாக கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அவ் வேலைத்திட்டங்கள் கமநல ஆலோசகர்கள் மற்றும் கமநல அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தர்களால் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டியதாக மானிய உரங்களைப் பகிர்வதற்குரிய சுற்றறிக்கையின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், விவசாயிகள் குறித்த உரத்தின் அளவை விநியோகிப்பதாகவும், உரிய உரம் குறித்த வகையில் தமது வயலுக்காகப் பயன்படுத்தப்படுவதாகவும் உறுதிப்படுத்தும் முறையான நடைமுறை மேற்குறித்த உத்தியோகத்தர்களிடம் இன்மை அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட தகவல் கோரலின் போது வெளியாகியது.

(இ) குறித்த காலநிலை வலயத்திற்கும் மண்ணிலுள்ள இரசாயனக் கலவைகளை தொடர்ந்து மதிப்பிடும் தெளிவான நடைமுறையொன்று இன்மை.

**தெரிவிப்பு**

i. எதிர்பார்க்கப்பட்ட ஆகக் கூடிய அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியாமை மற்றும் சுற்றாடல் தாக்கம் ஏற்படல்.

ii. கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களின் கடமை முறைப்படி மேற்கொள்ளப்பட்டிராமை.

**பரிந்துரை**

i. உரப் பரிந்துரை குறித்த வகையில் பயன்படுத்தப்பட வேண்டியதாக கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளா் உத்தியோகத்தர்களூடாக விவசாயிகளை அறிவூட்டல் மற்றும் இது தொடர்பான போதிய கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றை செயற்பாட்டில் ஈடுபடுத்தல்.

ii. கமநல சேவை அதிகாரப் பகுதியின் நிலையில் உரிய பிரதேசத்தின் மண்ணில் நிலவும் இரசாயன கொள்ளளவு பகுப்பாய்வு செய்யப்பட்டு தரவுகளை நாளதவரையாக பேணி இதன் படி உரப் பரிந்துரையைத் தீர்மானித்தல்.

**நிறுவகங்களின் கருத்துக்கள்**

**கமநல அபிவிருத்தி திணைக்களம்**

''உரிய உரப் பரிந்துரைகள் முறையாகப் பயன்படுத்துவது தொடர்பில் குழுவால் விவசாயிகளை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் பதவியணிப் பற்றாக்குறை நிலவிய போதிலும் உரப் பரிந்துரை முறைப்படி பயன்படுத்தப்படுவது தொடர்பில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்புகள் முடியுமான வரை மேற்கொள்ளப்படுவதற்காக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.''

**கமநல அமைச்சு**

**''உரங்களின் பரிந்துரை செயற்படுத்தல்''**

சரியான உரப் பயன்பாடு தொடர்பாக விவசாயிகளை அறிவூட்டும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தேசிய உரச் செயலகத்தின் மாவட்டத்திற்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளர்களின் கண்காணிப்பின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடாத்தப்பட்டது. இதற்கு இணையாக விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களும் பட்டதாரிப் பயிலுனர்களும் நியமனம் பெற்ற கமநல அமைச்சிற்கு ஈடுபடுத்தப்பட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் உரப் பயன்பாடு தொடர்பான அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை இது வரையில் நடாத்தி வருகின்றன.''

### 3.4.2 உர பரிந்துரை செயற்படுத்தப்படுகையில் எழுந்த சிக்கல்கள்

2010/2011 பெரும் போகத்திற்குரித்தாக அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் குருநாகல் போன்ற மாவட்டங்களில் பயிரிடப்படும் நில அளவைக்

கருத்திற்கொள்கையில் உரப் பரிந்துரைகளின் படி பயன்படுத்தப்பட வேண்டிய உரத்தின் அளவு 74,812 மெ.தொ. ஆகக் காணப்பட்டதுடன் உள்ளபடியாகப் பயன்படுத்தியிருந்த உரத்தின் அளவு 59,904 மொ.தொ.களாகக் காணப்பட்டன. இதன் படி, 14,908 மெ.தொ. அதாவது 20 சதவீதம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பரிந்துரைக்கப்பட்ட இரசாயன உரப் பயன்பாட்டிற்கு முடியாமைக்குத் தாக்கமளித்திருந்த வெவ்வேறு காரணங்கள் பின்வருமாறாகக் காணப்பட்டன.

(அ) மானிய உரத்தைப் பகிர்ந்தளிப்பதற்காக நேரடியாகத் தொடர்புபட்டுள்ள கமநல சேவைகள் திணைக்களத்தின் பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் மற்றும் குழு எழுதுவினைஞர்கள் போதுமான வரையில் உரிய கமநல சேவைககள் நிலையங்களுக்கு இணைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கமநல சேவைச் சங்கங்களில் உரத் தேவைப்பாடு தீர்மானித்தல், களஞ்சியங்களிலிருந்து உரத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பெற்றுக்கொள்ளப்படும் உரம் விவசாயிகளுக்கிடையே அவர்களுக்கு உரித்தான விகிதத்தின் படி பகிர்ந்தளிக்கப்படுதல் போன்ற செயற்பாடகள் கமநல சேவைகள் மத்திய நிலையங்களைச் சூழ நேரும் செயற்பாடுகளானதுடன் அச் செயற்பாடு வெற்றிகரமாக செயற்படுத்தப்படுவதற்காக போதிய பதவியணியினர் கமநல சேவைகள் திணைக்களத்திடம் இருத்தல் வேண்டும். 2012 ஏப்ரல் 01 ஆம் திகதி நாட்டிலுள்ள 557 கமநல சேவை நிலையங்களின் உள்ளபடியான பதவியணி மற்றும் வெற்றிடங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணி** | **உள்ளபடியான எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **சதவீதம்** |
|---|---|---|---|---|
| கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | 610 | 465 | 145 | 23.7 |
| கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் | 9,600 | 8,869 | 731 | 7.6 |
| குழு எழுதுவினைஞர்கள் | 557 | 440 | 117 | 21 |

மூலம் : கமநல அபிவிருத்தி திணைக்களம்

தெரிவு அடிப்படையில் பௌதீக ஆய்வு மேற்கொள்ளப்பட்ட அநுராதபுர, பொலன்னறுவை மற்றும் குருநாகல் போன்ற மாவட்டங்களில் இவ் உத்தியோகத்தர்களின் பதவி வெற்றிடங்கள் பின்வருமாறாகக் காணப்பட்டதுடன் இது உரத் தேவைப்பாட்டைத் தீர்மானித்தல், களஞ்சியங்களிலிருந்து பெற்றுக்கொள்ளல், விவசாயிகளுக்கு முறைப்படி பகிர்ந்தளித்தல் மற்றும் வயல்களுக்குப் பயன்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் போன்ற ஒட்டுமொத்த செயற்பாடு முறைப்படி மேற்கொள்ளப்படாமைக்குத் தாக்கமளித்த முக்கிய காரணமானமை அவதானிக்கப்பட்டது. மேலும், ஒரு கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களுக்கு பிரிவுகள் சிலவற்றின் கடமைகளை மேவுவதற்காக நேர்ந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| மாவட்டம் | நிலையங்களின் எண்ணிக்கை | இருக்க வேண் யஉ த்தியோகத்தர்களின் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 40 | 718 | 636 | 82 |
| பொலன்னறுவை | 11 | 296 | 203 | 93 |
| குருநாகல் | 55 | 1490 | 1400 | 90 |

மூலம் : கமநல அபிவிருத்தி திணைக்களம்

**அறிவித்தல் :**

குறித்த நிலையங்களின் உரத் தேவைப்பாட்டை சரியாகத் தீர்மானித்தல், குறித்த தினத்தில் உரங்களைப் பெற்றுக்கொள்ளல், விவசாயிகளுக்கு வழங்கல் மற்றும் நிலத்திற்கு இடுதலைக் கண்காணித்தல் போன்ற செயற்பாடுகள் ஆக்கபூர்வமாகவும் செயற்திறனாகவும் மேற்கொள்ளப்பட முடியாது போன காரணத்தால் உர மானியம் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்பட முடியாது போயுள்ளது.

**பரிந்துரை**

வெற்றிடமாக உள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் படி கூடிய விரைவில் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**நிறுவகத்தின் கருத்துத் தெரிவிப்பு**

**கமநல அபிவிருத்தி திணைக்களம்**

“தேவையான 1583 கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களைச் சேர்ப்பதற்காக இது வரையிலும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்திலும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் தற்போது நிலவும் கடமை மேவுகையைக் குறைப்பதன் மூலம் அறிக்கைகள் உரிய நேரத்தில் வழங்கப்படுதல், அறிக்கைகள் பேணப்படல், உர பரிந்துரைகள் முறைப்படி குறித்த அளவில் பயன்படுத்தப்படுவதற்கான கண்காணிப்பு போன்றவற்றிற்காக தீர்வுகள் பெறப்படும் என எதிர்பார்க்கின்றேன்.

**கமத்தொழில் அமைச்சு**

நெல் மற்றும் ஏனைய பயிரினங்களைப் பயிரிடும் நில அளவில் மாவட்ட மட்டத்தில் சரியாகக் கணிப்பிடுவதற்காக தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இதுவரையிலும் அவர்கள் ஒவ்வொரு மாவட்டங்களுக்குரித்தான பயிரினங்களின் பயிரீட்டு நில அளவில் சரியாக இனங்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறே நெல் செய்கைக்குரித்தான கடந்த ஆண்டுகளின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பெரும்போகத்தின் போது 700,000 ஹெக்டேயரும் சிறு போகத்தின் போது 500,000 ஹெக்டேயருமாக நெற் செய்கை நில அளவு வரையறுக்கப்பட்டு உரத் தேவைப்பாட்டைக் கணிப்பிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது 2013/2014 பெரும்போகம் முதல் ஆரம்பிக்கப்பட்டது.”

(ஆ) உரத் தேவைப்பாட்டைச் சரியாக மதிப்பிடப்பட்டிராமையால் கமநல சேவைகள் நிலையத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட உரத்தின் அளவைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. ஒவ்வொரு போகத்தின் போதும் பயிரிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நில அளவிற்கு இணங்க விவசாயிகளின் உரத் தேவைப்பாடு தொடர்பான தரவைப் பெற்றுக்கொண்டதை அடுத்து குறித்த போகங்களுக்காக உரத் தேவைப்பாடு மதிப்பிடப்பட்டு, அப் போகத்தின் படி இறக்குமதி செய்யப்பட்டு கமநல சேவை நிலையத்திற்கு விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும் ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உர அளவை குறித்த கமநல சேவை நிலையத்தால் பெற்றுக்கொள்ளப்படுகையில் மதிப்பீட்டின் படி பயன்படுத்தப்பட வேண்டிய தமக்குரித்தான உர அளவைப்பார்க்கிலும் குறைவான அளவைப் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்கள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. நாட்டில் வருடாந்தம் எஞ்சும் மானிய உர அளவு படிப்படியாக அதிகரிப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும் என்பது அவதானிக்கப்பட்டது. உரத் தேவைப்பாடு மதிப்பிடப்படுகையிலும் பயிரிடப்படும் சரியான காணி அளவு தொடர்பான தரவுகளைப் பெற்றுக்கொள்ளாது கற்பனையான மற்றும் கடந்த ஆண்டின் போது பயிரிடப்பட்ட நில அளவு தொடர்பான கிட்டிய தரவுகளின் அடிப்படையில் உரங்களின் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமையால் இவ்வாறு உரத்தின் மிகை ஒவ்வொரு போகத்தின் போதும் ஏற்பட்டது. கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியிலிருந்து 2009/2010 பெரும் போகத்திலிருந்து விற்பனை செய்யப்பட்ட உரத்தின் மதிப்பீட்டின் 60 சதவீதத்திற்கும் குறைவான உரத்தைப் பெற்ற கமநல சேவை நிலையங்களின் எண்ணிக்கை பின்வருமாறாகும்.

| 2009/2010 பெரும் போகம் | | | | 2009/2010 பெரும் போகம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மதிப்பீட்டில் 60% இலும் பார்க்கக் குறைவாக உரத்தைப் பெற்ற கமநல சேவைகள் சங்கங்களின் எண்ணிக்கை** | **மதிப்பிடப்பட்ட உரம்** | **கொள்வனவு செய்யப்பட்ட உரம்** | **வேறுபாடு** | **மதிப்பீட்டில் 60% இலும் பார்க்கக் குறைவாக உரத்தைப் பெற்ற கமநல சேவைகள் சங்கங்களின் எண்ணிக்கை** | **மதிப்பிடப்பட்ட உரம்** | **கொள்வனவு செய்யப்பட்ட உரம்** | **வேறுபாடு** |
| **மெட்ரிக் தொன்** | **மெட்ரிக் தொன்** | **மெட்ரிக் தொன்** | | | **மெட்ரிக் தொன்** | **மெட்ரிக் தொன்** | **மெட்ரிக் தொன்** |
| 22 | 19,705 | 8,134 | 11,571 | 37 | 20,657 | 7,115 | 13,542 |

மூலம் : உர ஏற்றுமதிக் கம்பனிகள் மற்றும் விவசாய அபிவிருத்தி திணைக்களம்

### தெரிவிப்பு

ஒவ்வொரு போகத்தின் போதும் பயிரிடப்பட்ட காணியின் அளவு தொடர்பாக சரியான தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிராமையால் உரத்தின் தேவைப்பாடு தொடர்பாக சரியான மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு முடியாதிருந்தமையால் தேவைப்பாட்டிற்கு மேலாக உரத்தை இறக்குமதி செய்வதன் மூலம் நாட்டில் வருடாந்தம் எஞ்சும் உரத்தின் அளவு படிப்படியாக உயர்வடைவதன் மூலம் உர மானியச் செயற்பாட்டின் செயலாற்றல் வீழ்ச்சியடைவதாக.

**பரிந்துரை**

ஒவ்வொரு போகத்திற்காக பயிரிடப்படும் காணியின் அளவு தொடர்பாக முடியுமானவரையில் சரியான தரவுகள் பெறப்பட்டதன் மூலம் (போகக் கூட்டங்களின் போது அப் போகத்தில் பயிரிடப்பட்ட காணியின் அளவு தொடர்பாக மேலும் சரியான தகவலைப் பெற்றுக்கொள்ளல்) தேவையான உரத்தின் அளவு சரியாக மதிப்பிப்பட்டு இதன் படி இறக்குமதி செய்வதற்குச் நடவடிக்கை எடுத்தல்.

**நிறுவகங்களின் கருத்துக்களைத் தெரிவித்தல்**

**கமநல அபிவிருத்தி திணைக்களம்**

"உரிய உர உற்பத்தியின் மூலம் முறைப்படி பயன்படுத்தப்படுவது தொடர்பாக குழுவின் மூலம் விவசாயிகளை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பதவியணிப் பற்றாக்குறை நிலவிய போதிலும் உர பரிந்துரை முறைப்படி பயன்படுத்தப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்புகள் இயலுமான வரையில் செயற்படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன."

(இ) உரம் கோரப்படுகையிலும், பரிந்துரைக்கப்படுகையிலும் பகிர்ந்தளிக்கப்படுவது தொடர்பாக கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள்/கமநல அமைப்புகளால் குறித்த உரத்தின் அளவில் வழங்கப்பட்டிராமை அல்லது உரத்தை மோசடி செய்யும் சந்தர்ப்பங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கமத்தொழில் அமைச்சின் செயலாளர், கமத்தொழில் அமைச்சர் மற்றும் சில சந்தர்ப்பங்களில் அதி மேதகு சனாதிபதி அவர்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வின் போது கண்டறியப்பட்டவாறு தேசிய உர அலுவலகத்தில் அத்தகைய முறைப்பாடுகளுக்காக பதிவேடு ஒன்று பேணப்பட்டிராததுடன் முறைப்பாடுகள் கோவையிடப்பட்ட கோவைகள் மாத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இக் கோவைகளைப் பரீட்சிக்கையில் 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஏப்ரல் 24 வரை சமர்ப்பிக்கப்பட்டுள்ள 16 முறைப்பாடுகள் காணப்பட்டதுடன் அம் முறைப்பாடுகள் தேசிய உரச் செயலகத்தின் பணிப்பாளர், கமநல அபிவிருத்தி மற்றும் கமத்தொழில் அமைச்சின் பணிப்பாளர் (விசாரணை)க்கு தொடர்புபடுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்ட கடிதங்கள், கோவையிடப்பட்டுள்ளன. இவை தொடர்பாக உரிய விசாரணைகள் நடாத்தப்பட்டு இடருக்குட்பட்ட விவசாயிகளுக்கு நியாயத்தை வழங்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**தெரிவிப்பு**

i. விளைவற்ற காணிகளின் அளவு உயர்வடைதல்

ii. பயிர்ச்செய்கையால் எதிர்பார்க்கப்பட்ட அதிகூடிய அறுவடை கிடைக்கப்பெற்றிராமை.

iii. அசாதாரணங்களுக்கு உட்படும் விவசாயிகளின் வறுமை நிலையை மேலும் உயர்த்துதல்.

**பரிந்துரைகள்**

உர முறைகேடுகள் தொடர்பாக அறிக்கையிடப்பட்ட உடன் உரிய முறைப்பாடுகள் தொடர்பாக ஆய்வுகள் நடாத்தப்பட்டு குற்றவாளியாக்கப்பட்டால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு சிரமத்திற்குட்பட்ட தரப்பினருக்கு நிவாரணம் வழங்கும் முறையைத் தயாரித்தல்.

**நிறுவனங்களின் கருத்தைத் தெரிவித்தல்**

**கமநல அபிவிருத்தி திணைக்களம்**

"உர முறைகேடுகள் அறிக்கையிடப்பட்டமை தொடர்பில் திணைக்களத்தின் மாவட்ட பிரதி/உதவி ஆணையாளர்கள் மூலமும் திணைக்களத்தின் சேவை, மனித வளங்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு போன்ற பிரிவுகள் மூலமும் முன்வந்து தவறிழைத்தவர்களை இனங்காண்பதற்கும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் உட்பட்ட தரப்பினருக்கும் நிவாரணம் வழங்கப்படுவதற்கு தொடர்ந்தும் அசாதாரணத்திற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன."

**கமத்தொழில் அமைச்சு**

உரம் தொடர்பாகப் பெறப்படும் முறைப்பாடுகள் உடனடியாகப் பரீட்சிக்கப்படுவதற்காக பின்வரும் படிமுறைகள் பின்பற்றப்படுகின்றது. மானிய உர நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான ஓர் முறைப்பாடு கிடைக்கப்பெற்றதை உடனடுத்து அம் முறைப்பாடு அதற்குரித்தான மாவட்டத்தின் உரப் பணிப்பாளர், தேசிய உரச் செயலகத்தின் மூலம் ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவதானிப்புகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் அவதானிப்புகளின் அடிப்படையில் முறையான உர ஒழுங்குமுறைகளுக்கு உள்ள தாக்கத்தின் அளவு

கருத்திற்கொள்ளப்பட்டு ஏற்ற முறையில் புலனாய்வினை மேற்கொள்வதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்குத் தகவல்கள் சமர்ப்பிக்கப்படும்.

(ஈ) உரக் கம்பனிகளால் விற்பனை செய்யப்பட்ட உரத்தின் அளவிற்கும் கமநல சேவைகள் நிலையத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட உரத்தின் அளவிற்கும் இடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய வேறுபாடுகள் கண்டறியப்பட்டன. இதன் படி ஒவ்வொரு போகத்திற்காகவும் உரிய மாவட்டங்களுக்கு உரக் கம்பனிகளால் விற்பனை செய்யப்பட்ட மானியம் வயலுக்கான மானிய உரத்தின் அளவு தொடர்பாக கருத்திற்கொள்கையில் அக் கம்பனியால் வழங்கப்பட்ட தரவுகளின் படி விநியோகிக்கப்பட்ட உரத்தின் அளவு மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் படி மாவட்டங்களில் கமநல சேவைகள் நிலையத்தால் கொள்வனவு செய்யப்பட்ட உரத்தின் அளவிற்கும் இடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. அவ்வாறு கம்பனியால் விற்பனை செய்யப்பட்ட மானிய உரத்தின் அளவும் உரிய மாவட்டங்களில் கமநல சேவை நிலையங்களால் கொள்வனவு செய்யப்பட்ட மானிய வயல் உரத்தின் அளவிற்கும் இடையேயான வேறுபாடுகளுக்கான காரணங்கள் கணக்காய்விற்குத் தெளிவூட்டப்பட்டிருக்கவில்லை. மானிய உரம் விநியோகிக்கப்படுகையில் கமநல சேவைகள் நிலையங்களினூடாகவும் உரக் களஞ்சியங்களூடாகவும் பாரிய முறைகேடுகள் நேர்ந்துள்ளமை பற்றிய தகவல்கள் உள்ளமையால் இவ்வாறு உரக் கம்பனியால் மாவட்டத்திற்கு விற்பனை செய்யப்பட்ட உரத்தின் அளவைப் பார்க்கிலும் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ கமநல சேவைகள் நிலையத்தால் உரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கும் நிலைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

2009 சிறு போகத்திற்காக ஒரு கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் படி 11 மாவட்டங்களுக்காக விற்பனை செய்யப்பட்டிருந்த மானிய வயல் உரத்தின் அளவு (யூரியா, ரீ.எஸ்.பீ. எம்.ஓ.பீ) 27,813 மெ.தொ. ஆகக் காணப்பட்டதுடன் அம் மாவட்டங்களின் கமநல சேவைகள் நிலையத்தின் மூலம் பேணப்பட்டு வந்த அறிக்கைகளின் படி அக் கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்ட அளவு 25,368 மெ.தொ.களாகக் காணப்பட்டன.

மேலும் 2009/2010 பெரும் போகத்திற்கு 12 மாவட்டங்களுக்காக அக் கம்பனி விற்பனை செய்த அளவும் கமநல சேவைகள் நிலையத்தின் படி

கொள்வனவு செய்யப்பட்டிருந்த அளவும் முறையே 52,957 மெ.தொ. களும் 45,857 மெ.தொன்களாகவும் இருந்தன. இதன் படி மேற்குறித்த 2 போகங்களுக்காக கமநல சேவைகள் நிலையங்களுக்கு இக் கம்பனிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உரத்தின் அளவு கம்பனி விற்பனை செய்ததாகக் குறிப்பிட்ட அளவிற்கும் இடையே 9,545 மெ.தொன் வேறுபாடுகள் உள்ளமை அவதானிக்கப்பட்டது.

**தெரிவிப்பு**

மானிய உரமாக கம்பனியால் கமநல சேவைகள் நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட உரம் விவசாயிகளுக்குக் கிடைக்கப்பெற்றிராமை அல்லது வேறு முறையற்ற நடவடிக்கைகளுக்காக இடமளிக்கப்பட்டமையால் உரம் பகிர்ந்தளிக்கப்படும் பொறிமுறை உறுதியற்றதென்பதாகும்.

**பரிந்துரை**

i. மானியமாக விவசாயிகளுக்கு கம்பனிகளால் விநியோகிக்கப்படும் உரத்தின் அளவு விவசாயிகளுக்கு நேரடியாகக் கிடைக்கும் வகையிலும் ஏனைய முறைகளுக்கு பயன்படுத்த முடியாத வகையில் பகிர்ந்தளித்தல் வழிமுறையை உறுதிப்படுத்துவதன் மூலம் விவசாயிகள் பெற்றுக்கொண்ட உரம் உரிய பரிந்துரையின் பிரகாரம் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தல்.

ii. ஒவ்வொரு உரக் கம்பனியாலும் கமநல சேவை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும் உரம் தொடர்பாக சரியான தரவுகள் அடங்கிய அறிக்கை நாளதுவரையாக பேணப்படுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்படல்.

**நிறுவகங்களின் கருத்துரை**

**கமத்தொழில் அமைச்சு**

களத்தில் விவசாயிகளுக்கு உரத்தைப் பகிரும் நடவடிக்கைகள் கமநல அபிவிருத்திச் சங்கங்களுக்கு ஒப்படைக்கப்படுவதற்கும், அந் நடைமுறை சேவை நிலைய மட்டத்தில் கண்காணிக்கப்படுவதற்காக கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களுடாக மேற்கொள்ளப்படுவதற்கும் மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் கண்காணிப்பு தேசிய உரங்கள் செயலக அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர்களுடாக மேற்கொள்ளப்படுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் படி நெல் செய்கையின் போது காபனிக் உரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் உள்ள முக்கியத்துவம் தொடர்பான ஆய்வின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் பின்வருமாறாகும்

(அ) மானிய உரப் பகிர்வுச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மானிய அடிப்படையில் இரசாயன உரம் பகிர்ந்தளிக்கப்படுகையில் சுற்றாடல் நட்பாக அறுவடைகளை மேம்படுத்துவதற்காக வைக்கோல் மற்றும் சேதன பசளை பயன்பாட்டிற்கு விவசாயிகள் ஆர்வம் காண்பிக்கும் செயற்பாட்டை எடுத்தல் கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களின் அத்தியாவசியமான செயற்பாடானதுடன் இரசாயன உரம் வழங்கப்பட முன்னர் வைக்கோல் மற்றும் காபனிக் உரம் பயன்படுத்தப்படுவதற்கு சகல நடவடிக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், கமநல சேவை நிலையங்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவலின் படியும் பௌதீக ரீதியாக மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின் பிரகாரமும் விவசாயிகளால் பெரும்பாலான சந்தர்ப்பங்களின் போது வைக்கோல் தீயிட்டு அழிக்கப்படுவதாகவும் இரசாயன உரம் விவசாயிகளுக்குப் பகிரப்பட முன்னர் அவர்களால் சேதன பசளை வயல்களுக்குப் பயன்படுத்தப்படுவதற்குத் தேவையான செயற்பாடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்படாது அவர்கள் கோரிய இரசாயன உரத்தின் அளவை அவ்வாறே வழங்குவதும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) எனினும், சேதன மற்றும் இரசாயன உரம் எனும் இரண்டையும் பயன்படுத்துவதன் மூலம் கூடிய அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியும் என ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த பயிரீட்டுப் போகங்களுக்காக மானிய உரப் பகிர்வு தொடர்பாக தேசிய உரச் செயலகத்தால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையில் ஆகக் கூடிய அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு ஹெக்டேயருக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய இரசாயன உர கிலோ கிராமின் அளவு அந்தந்த காலநிலை வலயம் மற்றும் நீர்ப்பாசன முறைமையின் கீழ் வெவ்வேறாக தெளிவாகக் காண்பிக்கப்பட்ட போதிலும் ஆகக் கூடுதலான அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்காக இரசாயன உரத்துடன் ஒரு ஹெக்டேயருக்கு எந்த அளவு சேதன பசளை அளவைப் பயன்படுத்த வேண்டும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிராமையால் சேதனப் பசளை தொடர்பாக குறைவான கவனம் செலுத்தப்படுவதற்குக் காரணமாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) ஆகக் கூடிய அறுவடையை பெற்றுக்கொள்வதற்காக இரசாயன உரத்துடன் சேதன உரத்தைப் பயன்படுத்தும் முக்கியத்துவம் கமநலத் திணைக்களத்தால் எடுத்துக்காட்டப்பட்ட போதிலும் இரசாயன உர மானிய அடிப்படையில் மிகக் குறைவான விலைக்கு எளிதாகப் பெற்றுக்கொள்ளப்படக் கூடியமையால் விவசாயிகள் தமது நேரத்தையும் உழைப்பையும் செலவிட்டு சேதன உரத்தை உற்பத்தி செய்வதற்கு ஊக்கம் காண்பிக்காமை மற்றும் இதன் படி நெற் செய்கைக்காக சேதன உரப் பயன்பாட்டிற்குள்ள நாட்டம் மிகவும் குறைவாகவே உள்ளமை கமநல சேவைகள் நிலையத்தின் நிலையில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் ஆய்விலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப் பயணங்களின் போது கண்டறியப்பட்டது.





பொலன்னறுவை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது 2011/2012 பெரும் போகத்தின் போது அறுவடை மேற்கொள்ளப்பட்டதை அடுத்து வைக்கோல் காபனிக் உரமாகப் பயன்படுத்தப்படாது வயல்களில் குவித்து வைக்கப்பட்டுள்ள விதம்.

**தெரிவிப்பு**

i. ஆகக் கூடிய அறுவடை கிடைக்கப்பெறாமை

ii. பயிர்ச்செய்கை சுற்றாடல் நட்பிற்குரித்தானதாக மேற்கொள்ளப்படும் இயைபு இன்மை

iii. இரசாயன உரம் பயன்படுத்தப்பட்டமையால் நீண்ட காலமாக மண்ணுக்கு நேரக்கூடிய பாதகமான தாக்கம் காரணமாக நிலக் கீழ் நீர் மாசடைதல், உள்ளக நீர்த்தேக்கங்களில் நீர் வாழ் உயிரினங்கள்

அழிவடையும் அபாயம் எதிர்நோக்கப்பட்டமையால் ஒட்டுமொத்த உயிரினங்களின் நிலைப்பாடு எச்சரிக்கையாகக் காணப்பட்டது.

iv. பல்வேறு நிபுணர்கள், உலக சுகாதார அமைப்புகள் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றம் போன்ற நிறுவகங்களால் உறுதிப்படுத்தப்பட்டதாக வெளியிடப்பட்ட ஆவணங்களின் படி வடமத்திய மாகாணத்தில் /ரஜரட்ட சிறுநீரக நோய் இரசாயன உரம், கிருமி நாசினி மற்றும் களை நாசினி பயன்படுத்தப்பட்டமையால் நேர்ந்ததாக அபிப்பிராயம் வெளியானமை.

**பரிந்துரை**

i. விவசாய அமைப்புகளுக்கு இரசாயன உரத்தை வழங்குவதற்கு முன்னர் அவர்களால் தமது பயிர்ச்செய்கைக்காக சேதன உரத்தைப் பயன்படுத்துவதற்கான நடைமுறை தயாரிக்கப்பட்டதாக உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட நேரடியான கண்காணிப்பை உறுதிப்படுத்தியதை அடுத்து உரத்தை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

ii. உரத்தைப் பகிர்ந்தளிப்பதற்குரிய குறித்த போகங்களுக்காக விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் ஆகக் கூடிய விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு ஹெக்டேயருக்கு இரசாயன உரத்துடன் பயன்படுத்தப்பட வேண்டிய சேதன உரத்தின் அளவைக் குறிப்பாகக் காண்பித்து இது தொடர்பாக விவசாயிகளை அறிவூட்டல்.

iii. ஆகக் கூடிய அறுவடை எனும் கருப்பொருளுக்கு மேலதிகமாக காபனிக் உரப் பயன்பாட்டில் உள்ள பொருளாதார மற்றும் சுற்றாடல் முக்கியத்துவம் தொடர்பாக விவசாயிகளுக்கு எடுத்துக்கூறல்.

iv. வடமேல் மாகாணத்தில் பரவிவரும் சிறுநீரக நோய் தேசிய பிரச்சனையாகக் கருதப்பட்டு இது தொடர்பாக சரியான முடிவுக்கு வரும் வகையில் இதற்கு இரசாயன உரப் பயன்பாட்டில் ஏதேனும் தாக்கம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள தேவையான நடவடிக்கை எடுத்தல்.


**நிறுவகங்களின் கருத்துத் தெரிவிப்பு**

**கமத் தொழில் அமைச்சு**

“சேதன உர மற்றும் இரசாயன உரமாகிய இரு வகைகளையும் பயன்படுத்தும் முக்கியத்துவத்தைப் பிரசாரம் செய்வதற்கு விவசாயிகளைப் பயிற்றுவித்துக் கள மாதிரிகள், ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கள உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் ஆகிய நடவடிக்கைகள் 2008 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டுவருவதுடன் முன்னேற்ற அறிக்கை ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டின் சகல மாவட்டங்களிலும் காபனிக் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**3.6 மானிய உர நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் விவசாயக் காணிகளில் எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலை உயர்த்துதல்**

நெல் செய்கையிலிருந்து ஆகக் கூடிய அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்காக கமத்தொழில் திணைக்களத்தின் உரத்தின் பரிந்துரைக் குழுவால் குறித்த காலநிலை வலையத்தின் படி ஏக்கர் ஒன்றிற்கு 100, 120 மற்றும் 140 புசலாக அறுவடை பெற்றுக்கொள்வதற்காக உரப் பரிந்துரை முதலில் வழங்கப்பட்டிருந்தது. (2001 ஆம் ஆண்டு முதல் 2008/2009 ஆம் பெரும் போகம் வரை) எனினும் அறுவடை தொடர்பாக கமத்தொழில் திணைக்களத்திற்கும் ஹெக்டர் கொப்பேகடுவ கமத்தொழில் நடவடிக்கை மற்றும் பயிற்சி நிறுவகத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் பரீட்சிக்கப்படுகையில் நெல் அறுவடை எதிர்பார்க்கப்பட்ட நிலையை அடைந்திராமை அவதானிக்கப்பட்டது. பின்னர், உர பரிந்துரை ஈர, உலர் மற்றும் இடைக்கால வலயங்களின் நீர்ப்பாசன முறை நிலையின் கீழ் ஏக்கர் ஒன்றிற்கு 100 புசலாகவும், வருடாந்த உர நிலையின் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் அறுவடை ஏக்கர் ஒன்றிற்கு 80 புசலாகவும் கருதப்பட்டு உரப் பரிந்துரை திருத்தியமைக்கப்பட்டிருந்தது. எனினும், திருத்தப்பட்ட அறுவடை அளவேனும் பெற்றுக்கொள்ளப்பட முடியாதிருந்ததுடன் இலங்கையின் ஒட்டுமொத்த சராசரி அறுவடை 80 – 90 புசல் நெல் என்ற நிலையில் நிலவியமை அவதானிக்கப்பட்டது.




மூலம் : ஹெ.கொ.க.ஆ. மற்றும் ப. நிறுவகம்

இது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை மற்றும் கள ஆய்வின் போது கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் தெரிவித்த விடயங்கள் மற்றும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்களின் படி பின்வரும் காரணங்கள் இதற்காகத் தாக்கமளித்திருந்தன.

i. இரசாயன உரப் பரிந்துரையுடன் பயன்படுத்தப்பட வேண்டிய சேதன உரத்தைப் பயன்படுத்தாமை

ii. தம்மிடமுள்ள சரியான நில அளவு குறித்து விவசாயிகளுக்கு அறிவின்மை அல்லது வெளிப்படுத்தப்படாமையால் உரத்தின் பரிந்துரை குறித்த வகையில் பயன்படுத்தப்பட முடியாமை.

iii. பயிரிடப்படும் நெல்லின் வகை மற்றும் வயதுத் தொகுதி தொடர்பாக சரியான அறிவு பெரும்பாலான விவசாயிகளுக்கு இன்மை.

iv. உரத்தை வழங்கும் அளவினால் அடிப்படை உரம் குறித்த சந்தர்ப்பத்தின் போது இடப்பட முடியாது போனமை. ஆகக் கூடிய அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்காக பரிந்துரை செய்யப்பட்ட உரத்தின் அளவை குறித்த காலப்பகுதியின் போது வயலுக்கு இடப்படுவது கட்டாயமான போதிலும் கமநல சேவைகள் நிலையத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவலின் பிரகாரம் பயிரீட்டு போகம் ஆரம்பிக்கும் நாள் போகக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டதை அடுத்தும் இரண்டு மூன்று கிழமைகள் அளவு கடக்கும் வரை விவசாயிகள் தமது உரத்தின் தேவைப்பாடுகளைக் கோராது

விடுவதும் இந் நிலை விவசாய ஆய்வு உத்தியோகத்தர் அமைப்புப் பிரிவின் ஒட்டுமொத்த உரக் கோரல் நடைமுறையின் தாமதத்திற்குக் காரணமானதெனவும், இவ்வாறே தாமதமான கோரல்களுக்கு மேலதிகமாக தாமதமாக உரம் பெறப்படுவதும் காரணமாக பயிர்ச்செய்கைக்காக அடிப்படை உரம் (டிரபல் சுபர் பொஸ்பேட்) இடப்படும் நடைமுறை ஒட்டுமொத்தமாக எடுக்கையில் எதிர்பார்த்த நிலையில் இன்மை அவதானிக்கப்பட்டமை.

v. பாரம்பரிய நெல் உற்பத்தியின் ஈடுபட்ட விவசாயிகள் தாம் பழக்கப்பட்ட முறைகளையே பின்பற்றியும் யூரியா, எம்.ஓ.பீ, போன்ற இரு வகைகளை மாத்திரம் பயன்படுத்தப்படுவதற்குக் கூடிய நாட்டம் காண்பித்து ரீ.எஸ்.பீ. வகையை மிகக் குறைவாகப் பயன்படுத்துதல்.

vi. சிறு அளவான விவசாயிகள் தமக்குரித்தான உரத்தின் அளவை முற்றாக வயலுக்குப் பயன்படுத்தாது தமது வேறு மரக்கறிகள் போன்ற பயிர்களுக்காகப் பயன்படுத்துதல்.

**தெரிவிப்பு**

i. இரசாயன உரத்தை இடுவதன் மூலம் ஏக்கர் ஒன்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் விளைச்சல் பெறப்படாமை.

ii. நெற்செய்கை ஏக்கர் ஒன்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் விளைச்சல் கிடைக்கப்பெற்றிராமையால் வழங்கப்பட்ட உர மானியத்திலிருந்து ஆகக் கூடிய பயன்பெறப்பட்டிராமை.

**பரிந்துரை**

i. தொடர்ச்சியாக போகத்திற்குப் போகம் கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் மண் ஆய்வு பரீட்சிக்கப்படுவதன் மூலம் உரத்தின் இரசாயனக் கொள்ளலவு ஆய்விற்கு வேலைத் திட்டமொன்று பயன்படுத்தப்படுவதன் மூலம் இதன் படி உரப் பரிந்துரை திருத்தப்பட்டு ஏற்ற கொள்ளளவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

ii. இரசாயன உரத்துடன் பயன்படுத்தப்பட வேண்டிய சேதன உர விகிதாசாரத்தைக் குறிப்பாக குறிப்பிட்டு இதனை இடுவதனைக் கட்டாயமாக்கல்.

iii. குறித்த விவசாயிகளிடம் உள்ள வயல் காணிகளின் அளவு சரியாக இனங்காணப்பட்டதை அடுத்து மாத்திரம் அந் நில அளவிற்கு உரித்தான பரிந்துரைக்கப்பட்ட உர அளவை வழங்குதல்.

**நிறுவகங்களின் கருத்துக்களைத் தெரிவித்தல்**

**கமநல அபிவிருத்தி திணைக்களம்**

"வயல் காணிகளின் மண் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு விவசாயிகளுக்காக சுகாதார அட்டைகள் (Soil health card) விநியோகிக்கப்படும் செயற்திட்டத் தொகுப்பு கமத்தொழில் திணைக்களத்தின் (HORDI) நிறுவகத்துடன் 2013 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படுவதற்கு ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன் மூலம் மண்ணில் நிலவும் மண் வளத்தை ஆராய்ந்தறிந்து உரப் பரிந்துரையைத் திருத்தும் இயலுமை கையாளப்படும்.

எவ்வாறெனினும், இதற்காக தேசிய செயற்பாடு ஒன்று எதிர்காலத்தில் செயற்படுத்தப்பட வேண்டியதென முன்மொழிகிறேன்.

**கமத்தொழில் அமைச்சு**

"உரம் இடப்படுதல், விளைச்சல் தொடர்பாக நேரடியாகத் தாக்கமளிப்பதுடன் இதற்கு லேதிகமாக காலநிலைக் காரணிகள், நீர் பயன்பாடு விளைச்சல் தொடர்பில் தாக்கமளிக்கும். 2000 – 2005 காலப்பகுதியின் போது பொதுவாக வயல் ஏக்கர் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 74 புசலில் இருந்து 2006 – 2011 காலப்பகுதியின் போது அந்த அளவு 82 புசல் வரை அதாவது 12 சதவீதத்தாலான அதிகரிப்பு அறிக்கையிடப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையிலும், நிதி அமைச்சின் 2012 ஆண்டறிக்கை மற்றும் உர மானியத்தின் தாக்கத்தை மதிப்பிடும் கற்கையிலும் சராசரி விளைச்சல் 2005 இற்கு ஒப்பீடாக 2006/2007 பெரும் போகத்தில் 9 சதவீதத்தாலும் சிறு போகத்தில் 15 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது.

பரிந்துரைகளுக்கிடையே சேதன உரத்தைப் பயன்படுத்துவதை கட்டாயப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அத் தீர்மானம் நடைமுறையில் செயற்படுத்தப்படுவது சிரமமாக உள்ளது. கட்டாயமாக்கப்படுவதிலும் பார்க்க சரியான தீர்மானங்களை எடுப்பதற்காக விவசாய மக்களை அறிவால் போசிப்பதற்கு மேலும் ஆக்கபூர்வமானதாகும்.

## 3.7 போதிய களஞ்சிய வசதிகள் பேணப்படாமை

**3.7.1** 1988 இன் 68 ஆம் இலக்க உர நெறிப்படுத்தல் பிரிவு/ உரிய அதிகாரச்சட்டத்தின் 2(2) ஆம் பிரிவு மற்றும் உரிய அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் உப பிரிவின் பிரகாரம் உர நிறுவக அனுமதிப்பத்திரப் பெறுனரால் போதிய களஞ்சிய வசதிகளும் களஞ்சிய இட வசதிகளும் உள்ளமை குறித்து உறுதிப்பாடொன்றை வழங்க வேண்டும்.

எவ்வாறெனினும், இறக்குமதி செய்யப்படும் உரத்தில் 65 சதவீதத்திற்கு உரித்தான இலங்கை உரக் கம்பனி உரத்தைக் களஞ்சியப்படுத்தியுள்ள விதம் குறித்து பரீட்சிக்கையில் உரிய உரத்தின் இருப்பு வெயிலிலும் மழையிலும் மூடப்படாத நிலையில் வெளியில் வைக்கப்பட்டிருந்தன. இது குறித்து பின்வரும் படங்களில் இருந்து உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.







இறக்குமதியாளரின் களஞ்சியத்திற்கு வெளியே திறந்த வெளியில் உர இருப்பு குவிக்கப்பட்டுள்ள விதம்

### 3.7.2 நிலவும் களஞ்சி வசதிகளை அகற்றுவதற்கு நேரல்

மேற்குறித்த நிலை தொடர்பாக பரீட்சிக்கையில் உரக் கம்பனி அண்மையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் அதிவேக வீதியால் கம்பனியிடம் இருந்த 106,766 சதுர அடி அளவிலும் 70,000 மெட்ரிக்தொன் இயலளவுடைய களஞ்சியக் கட்டிடம் ஒன்று 2009 ஆம் ஆண்டின் போது உடைத்து அகற்ற நேர்ந்துள்ளமை கண்டறியப்பட்டது. இதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் ரூபா 61 மில்லியன் தொகையான பணமும் ரூபா 75 மில்லியன் திறைசேரி முறிகளிலிருந்து 2005 ஆம் 2009 ஆம் ஆண்டுகளின் போது கம்பனிக்குக் கிடைக்கப்பெற்றுள்ள போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2012 மே 18 ஆம் திகதி வரை உரிய உர அளவு களஞ்சியப்படுத்தப்படுவதற்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறெனினும், இல் அமைச்சின் கீழுள்ள மக்கள் உரத் தொழில் முயற்சியிடமுள்ள பல களஞ்சியங்கள் வேறு வெளி நிறுவகங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன. இக் களஞ்சியம் தொடர்பாக உரக் கம்பனியால் அமைச்சிற்கு கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்குறித்த கணக்காய்வுத் தினம் வரையிலும் இத் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

#### தெரிவிப்பு

i. ஒரே நோக்கத்திற்காகச் செயற்படும் அமைச்சின் கீழ் உள்ள இரு தொழில் முயற்சிகளின் செயற்பாடு ஒருங்கிணைக்கப்பட்டிராமை.

ii. எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை எய்துவதற்கு தொழில் முயற்சிகளின் வளங்கள் ஆக்கபூர்வமாக ஈடுபட்டிராமை.

#### பரிந்துரை

i. மக்கள் உரத் தொழில் முயற்சியின் கீழுள்ள களஞ்சிய வசதிகளை மேம்படுத்தல்.

ii. மானிய உரத் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு இயலுமானவகையில் நிறுவகங்களுக்கிடையே முறையான தொடர்பாடலும் ஒருங்கிணைப்பையும் கட்டியெழுப்புதல்.

**நிறுவகங்களின் கருத்துத் தெரிவிப்பு**

**பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.**

### 3.7.3 கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் களஞ்சிய வசதிகளைப் பேணல்

உர மானியங்களை வழங்குவதற்குரிய கொள்கைகளைச் செயற்படுத்தியிருந்த போதிலும் இதனை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கியோ அல்லது விருத்தி செய்தோ இராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எடுத்துக் காட்டாக உரிய மாவட்டங்களில் உரத்தை களஞ்சியப்படுத்தியிருந்தமைக்கு கமநல சேவைகள் நிலையங்களுக்கு போதிய களஞ்சிய வசதிகள் இருக்கவில்லை. பாரியளவிலான உர அளவை ஒரு ிக்கபிரதேசத்தில் (மாவட்டத்தில்) புழக்கத்தில் இருந்த போதிலும் இதற்குத் தேவையான களஞ்சிய வசதிகள் எதுவும் புதிதாக உருவாக்கப்பட்டோ அல்லது காணப்படும் களஞ்சியங்களை இதற்காகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்கான உர இருப்பு பிரதேசத்தில் பாதுகாப்பின்றி களஞ்சியங்களில் சில வேளைகளில் வீடுகளிலிருந்த சேதமுற்ற களஞ்சியங்களிலும் முற்றத்திலும் திறந்த நிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் விவசாய பரிசோதனை மற்றும் உற்பத்தி உதவியாளர்களுடனும் மேற்கொள்ளப்பட்டிருந்த கலந்துரையாடல்களின் போதும் அவர்களிடமிருந்து சேகரித்துக்கொள்ளப்பட்ட தரவுகளின் ஆய்வின் போது அவதானிக்கப்பட்டவாறு உர மானிய செயற்பாட்டை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்காகப் பேணப்படும் களஞ்சிய வசதிகள் எவ்வகையிலும் போதாததாகவும் பெரும்பாலான கிராமியப் பகுதிகளுக்காக உரிய களஞ்சியங்கள் வளங்கப்படுவதும் கட்டாயமாகும்.

**தெரிவிப்பு**

i. நெற் செய்கைக்குத் தேவையான சந்தர்ப்பத்தின் போது தேவையான அளவிற்கு உரத்தை விநியோகிப்பதற்கு முடியாது போனமையால் உர மானியத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்கு எய்தப்பட்டிருக்கவில்லை.

ii. உரம் சேதமடைவதற்கும் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவதற்கும் வழிவகுத்தல்.

iii. சுற்றறிக்கையின் பிரகாரம் உரத்தைக் களஞ்சியப்படுத்தும் அறிவுறுத்தல் பின்பற்றப்பட்டிராத போது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு முடியாதிருந்தமை.

**பரிந்துரைகள்**

i. பிரதேசத்தில் சேதமடைந்து காணப்படும் களஞ்சியங்களை மேம்படுத்தி களஞ்சியமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படக் கூடிய மாற்றுக் கட்டிடங்கள் தொடர்பான ஆய்வின் பின்னர் அவற்றைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

ii. கமநல அமைப்புகளின் நிலையில் களஞ்சியங்களைத் தயார்படுத்துவதற்காக விவசாயிகளை ஊக்குவித்தல்.

iii. கமநல அமைப்புகளின் நிலையில் செயற்படும் சனசமூக மண்டபங்கள், வேறு அமைப்புகள் ஆகியவற்றிலுள்ள கட்டிடங்களை தற்காலிகமாக அல்லது களஞ்சியத்திற்காகவோ பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**நிறுவகத்தின் கருத்துத் தெரிவிப்பு**

**கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம்**

நிலவும் நிதி நெருக்கடியின் மத்தியிலும் உரக் களஞ்சியங்களை புனரமைத்து புதிய நிர்மாணிப்புகளுக்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டின் போது அநுராதபுரம், குருநாகல், மாத்தறை, புத்தளம், அம்பாந்தோட்டை, கேகாலை, மாத்தளை மற்றும் காலி போன்ற மாவட்டங்களில் புதிதாக 14 உரக் களஞ்சியங்களை நிர்மாணித்து பழுதுபார்ப்பிற்காக ரூபா 11 மில்லியன் செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டின் போது புதிய உரக் களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 14 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இதன் கீழ் மொனறாகலை, பதுளை, குருநாகல், பொலன்னறுவை, அநுராதபுரம், மாத்தளை, அம்பாந்தோட்டை மற்றும் காலி போன்ற மாவட்டங்களில் புதிதாக 07 உரக் களஞ்சியங்களை நிர்மாணித்துள்ளதுடன் உரக் களஞ்சியங்கள் இரண்டு திருத்தப்பட்டிருந்தன.

### 3.7.4 மானிய உர இருப்பு சேதமடைதல்

உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட கமநல மற்றும் பொருளாதார நோக்கங்களை எய்துவது பின்வரும் சந்தர்ப்பங்களில் முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

i. கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியின் களஞ்சியங்களில் மானிய உர இருப்பு மழை நீர் கசிவால் சேதமுற்றிருந்தது. சேதமுற்றிருந்த உரம் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்

| களஞ்சியம் | ஆண்டு | உர அளவு | பெறுமதி |
|---|---|---|---|
| | | 50 கிலோ பைகள் | ரூபா |
| மீதொட்டமுல்ல | 2011 | 602 | 1,967,669 |
| பந்துலகம | 2011 | 874 | 1,793,625 |
| | | | 3,761,294 |

ii. இவ் இருப்பு சேதமுற்றமைக்காக காப்புறுதி நட்டஈடு கோரப்பட்டிருந்த போதிலும் அது நிராகரிக்கப்பட்டிருந்தது.

iii. 2011 ஆம் ஆண்டின் போது இலங்கை உரக் கம்பனியின் ஹுணுபிட்டிய பிரதான களஞ்சியத்தில் இருந்த உர 1,500 மெ.தொன் வெள்ளத்தினால் சேதமுற்றிருந்தது.

**தெரிவிப்பு**

அரசாங்கப் பணம் செலவிடப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட உர இருப்புத் தொடர்பாக போதிய பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிராமையால் உரம் விரயமாகியிருத்தல்.

**பரிந்துரைகள்**

உர இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட முன்னர் உரிய கம்பனியிடம் போதிய களஞ்சிய வசதிகள் நிலவுவது குறித்து திருப்பதியடையும் தேவைப்பாடு தேசிய உர செயலகத்தால் கருத்திற்கொள்ளப்படல்.

**நிறுவகங்களில் கருத்துத் தெரிவிப்பு**

**கமத்தொழில் அமைச்சு**

" 2011 ஆண்டின் போது பண்டுலகம களஞ்சியத்தின் இருப்பு சேதமுறல் அன்றைய அநுராதபுர மாவட்டத்தில் நிலவிய அதிக மழை காரணமாக வாவி பெருக்கெடுத்ததன் காரணமாக ஏற்பட்ட வெள்ள நிலையாகும். இம் மழை அப் பிரதேசத்தில் பல ஆண்டுகாலத்தின் பின் ஏற்பட்டு வழமைக்கு மாறான மழை காரணமாக இக் களஞ்சியமுள்ள பிரதேசம் வழமையான மழை வீழ்ச்சி நிலையின் கீழ் வெள்ளத்தால் பாதிப்புற்ற பிரதேசமானமையால் இவ் எதிர்பாராத நிகழ்வு ஏற்பட்டிருந்ததுடன் இதனைத் தவிர்த்துக்கொள்வதற்கு முடியாதிருந்தது இதற்காக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் தொழில்நுட்பக் காரணத்தால் காப்புறுதி நட்டஈடு வழங்கப்படுவது நிராகரிக்கப்பட்டிருந்தது.

உரிய போகத்தின் தேவைப்பாடு மிகைத்து எஞ்சிய போகத்தின் தேவைப்பாடும் கருத்திற்கொள்ளப்பட்டு உர இருப்பு இறக்குமதி செய்யப்பட்டிருந்தமையால் இருப்பைக் களஞ்சியப்படுத்தியமையால் களஞ்சியம் போதாதிருந்த காரணத்தால் மீதொட்ட முல்லவிலுள்ள நெல் சந்தைப்படுத்தல் சபைக்குரித்தான களஞ்சியத்தின் உர இருப்பு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. 2011 யூலை மாதம் கொழும்பு நகரத்தில் பெய்த பெரும் மழை காரணமாக கொழும்பைச் சூழ உள்ள பிரதேசத்தின் நீர் வெள்ளத்தினால் முழ்கியிருந்தமையால் இருப்பு சேதமுற்றிருந்தது. இதற்காகவும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தொழில்நுட்பக் காரணத்தாலும் காப்புறுதி நட்டஈடு வழங்கப்படுவது நிராகரிக்கப்பட்டிருந்தது.

**3.8 நெற்பயிர்ச்செய்கைக்காக தேவையான நீர் முகாமைத்துவம் செய்தல்**

இலங்கையின் நெற்செய்கை தொடர்பாக நீர்ப்பாசனத்துறையில் உள்ள நேரடியான பங்களிப்பின் காரணமாக இது எந்தளவு ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தப்படுகின்றது என்பது குறித்து கமநல அபிவிருத்தித்

திணைக்கத்திடம் உள்ள நீர்ப்பாசன முறைமை தொடர்பான தரவுகளின் அடிப்படையில் ஆய்வு செய்கையில் 30,000 அளவிலான சிறிய நீர்ப்பாசனத் துறைகளில் 30 சதவீதமான வாவிகளும் அணைக்கட்டுகளும் கால்வாய்களில் 50 சதவீதமானவையும் பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளமையும் இந் நிலையில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காகப் பாதகமாகத் தாக்கமளித்துள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

கள ஆய்வின் போது மேற்கொள்ளப்பட்ட அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் அறுவடை செய்யக்கூடிய இடப்பரப்பு மற்றும் கடந்த போகங்கள் சிலவற்றில் (2011/ 2012 பெரும் போகம், 2011 சிறுபோகம், 2010/ 2011 பெரும் போகம்) பயிரிடப்பட்டுள்ள ஆகக் கூடிய காணி அளவிற்கிடையேயான வேறுபாட்டை ஆய்வு செய்கையில் இதற்காக போதிய நீர்வளம் இன்மை போன்ற விடயம் பாரியளவில் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. குறிப்பாக நெல் பயிரிடப்பட்ட போதிலும் அப் பயிர்ச்செய்கைக்காக போதிய நீரற்ற காரணத்தால் பயிர்ச்செய்கை நிலங்கள் சேதத்திற்குட்பட்டிருக்கும் நிலை 2012 சிறு போகத்தின் போது அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது. மானிய அடிப்படையில் உரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் காணிகளின் ஆகக் கூடிய விளைச்சலைப் பெற்று அரிசியில் நாட்டைத் தன்னிறைவடையச் செய்யும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முடியாது போனமைக்கு இந் நீர்ப் பற்றாக்குறை தாக்கமளித்துள்ள விதம் கடந்த சில ஆண்டுகளின் அரிசி இறக்குமதித் தரவுகளை ஆய்வு செய்கையில் அவதானிக்கப்பட்டது.



நீரற்ற வயல் வறட்சிக்குட்பட்டுள்ள விதம்
பொலொன்னறுவை மாவட்டம்



வயலுக்கு நீர் கொண்டு செல்லும் வாய்க்கால் வழி வறட்சிக்குட்பட்டுள்ள விதம்
பொலொன்னறுவை மாவட்டம்

மேலும் இந் நீர்ப்பாசன முறையை மீளமைக்காமையால் வாவி நீர் கொள்ளளவு வீழ்ச்சியுற்றமையும் குளக்கட்டுகளின் மீளமைப்பு முறைப்படி மேற்கொள்ளப்பட்டிராமையால் எழும் வெள்ள நிலை காரணமாக நெற்செய்கை சேதமுற்றும் இயற்கை அழிவுகள் ஏற்படுவதற்கும் காரணமாகக் கூடும் என கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் நீர்ப்பாசன முறைகளில் முறையான பராமரிப்பு மேற்கொள்ளப்படாமையால் பாரியளவில் நீர் வெளியேற்றுவது பெருமளவில் அவதானிக்கப்பட்டது.





பொலன்னறுவை மாவட்டக் களஞ்சிய ஆய்வின் போது முக்கிய நீரை வழங்கும் குள மார்க்கங்களில் ஜப்பான் ஜபர போன்ற நீர்த் தாவரங்கள் காரணமாக தடைப்பட்டுள்ள விதம்.

**தெரிவிப்பு**

வாவிகள் உட்பட நீர்ப்பாசன முறைமை காலத்திற்குக் காலம் பேணப்படாமை காரணமாக அவற்றின் நீர்கொள்ளலவு பாரியளவில் வீழ்ச்சியடைந்தமையால் மழை காலங்களில் நீர் ஆகக் கூடியளவில் தேக்கிவைக்கப்பட முடியாமை, வாவி அணைக்கட்டு உடைந்தமையால் பயிரினங்கள் சேதமுற்றிருந்தமை, மழை குறைவான சிறு போகத்தின் போது வாவி வற்றியமையால் பயிரிடப்படுவதற்கு போதிய நீர் இன்மையும், பயிர்ச் சேதங்கள் நேர்ந்தமையால் சிறிய மற்றும் பெரும் போகங்களாகிய இரண்டிலும் உர மானியத்திலிருந்து ஆகக் கூடியளவு விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**பரிந்துரை**

i. நெற்செய்கைக்கு நீர் அத்தியாவசியமான சந்தர்ப்பத்தின் போது நீர் வழங்கப்படுவதற்கு தேவையான சகல உட்கட்டமைப்பு வசதிகளும் வழங்கப்படல்.

ii. நெல் பயிரிடப்படும் பகுதிகளிலுள்ள வாவிகள் மற்றும் நீர்த் தேக்கங்களை நவீனமயமாக்கும் முறையான நடைமுறையை ஏற்படுத்தல்.

iii. குளங்கள், வாவிகளில் நிலவும் குறைபாடுகளைச் சீராக்கி நீர் விரயமாவதைக் குறைத்து நீர்ப் பங்கீட்டை முறைப்படுத்தி நிலவும் நீர் கொள்ளலவை ஆகக் கூடுதலான பயனைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

iv. புதிதாக பயிர் நிலங்களைச் செய்கை பண்ணுகையில் தற்போதுள்ள குளக்கரைகளின் நிலையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

v. நீர்ப்பாசன மற்றும் மழை நீரைப் போதியளவு முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**நிறுவகங்களின் கருத்துத் தெரிவிப்பு**

**பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.**


### 3.9 நெல் உற்பத்தி மற்றும் அரிசி இறக்குமதி அதிகரிப்பு

மானிய உர நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்காக இலங்கை அரிசியில் தன்னிறைவு அடைவதுடன் மானிய முறையின் கீழ் மானியத்திற்கு உரத்தை வழங்குவதன் மூலம் விவசாயிகள் நெற்செய்கையை மேலும் இசைவாக்கி இதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த அரிசி உற்பத்தியை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆய்வு செய்கையில் பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

### 3.9.1 நெல் உற்பத்தியின் அண்மைக்காலப் போக்கு

மானிய உர நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டதை அடுத்து அதாவது 2005 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு கருத்திற்கொள்கையில் நாட்டின் ஒட்டுமொத்த அரிசி உற்பத்தியில் கருத்திற்கொள்ள வேண்டிய முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டமை பின்வரும் குறிப்பிலும் வரைபின் மூலமும் கண்டறியப்பட்டது.

2005 ஆம் ஆண்டின் உற்பத்தி 3246 மெ.தொன் ஆகக் காணப்பட்டதுடன் 2010 ஆம் ஆண்டின் போது இது 4301 மெ.தொன் வரை 32.5 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது.




மூலம் : ஹெ.கொ.க.ஆ. மற்றும் ப. நிறுவகம்

### 3.9.2 அரிசி இறக்குமதிக்கான அன்னிய செலாவணி

நாட்டின் அரிசி உற்பத்தியில் வருடாந்தம் அதிகரிப்பு அவதானிக்கப்பட்ட போதிலும் அரிசி இறக்குமதி முறை குறைக்கப்பட்டு இதற்காக பாரியளவில் வெளிநாட்டிற்கு வெளிச் செல்லப்படும் அன்னிய செலாவணி நாட்டில் சேமிக்கப்படும் நோக்கம் எய்தப்பட்டிருக்கவில்லை.

2005 ஆம் ஆண்டு முதல் அரிசியை இறக்குமதி செய்த அளவும் இதற்காக வருடாந்தம் ஏற்கப்பட்ட செலவினமும் படிப்படியாக அதிகரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் 2005 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2010 ஆம் ஆண்டின் போது 143 சதவீதத்தால் அரிசி இறக்குமதி அளவும் 334 சதவீதத்தால் அரிசி இறக்குமதி செலவினமும் உயர்வடைந்திருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| | **இறக்குமதி அரிசி அளவு கி.கி** | **வருடாந்தக் கிரயம் ரூபா ஆயிரம்** |
|---|---|---|
| 2005 | 51,728,643 | 1,554,201 |
| 2006 | 11,516,400 | 576,509 |
| 2007 | 88,002,848 | 4,261,099 |
| 2008 | 84,044,529 | 4,726,775 |
| 2009 | 52,299,504 | 2,615,681 |
| 2010 | 125,775,929 | 6,741,365 |

மூலம் : ஹெ.கொ.க.ஆ. மற்றும் ப. நிறுவகம்

**தெரிவிப்பு**

i. உர மானியத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எய்தப்படாமை

ii. உர இறக்குமதிக்காகச் செலவிடப்படும் அன்னிய செலாவணி முறை உயர்வடையும் போக்கு நிலவுதல்.

iii. நாட்டில் அன்னிய செலாவணி ஒதுக்கம் குறைவடைதல்.

**பரிந்துரைகள்**

i. நாட்டில் பயன்பாட்டிற்காகத் தேவையான அரிசி அளவு முற்றாக உற்பத்தி செய்யப்படக்கூடிய வகையில் நெற்செய்கையை ஊக்குவிக்குமுகமாக தேவையான ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் (நீர்ப்பாசன முறை, களஞ்சிய வசதிகள், நெற்செய்கையின் கிரயத்தைக் கருத்திற்கொண்டு நியாயமான உறுதிப்படுத்தப்பட்ட விலையை நிர்ணயித்தல்) மேம்படுத்தல்.

ii. உள்நாட்டு சந்தையில் கூடிய கேள்வி நிலவும் புதிய நெல் வகையை இனங்கண்டு இவற்றை விவசாயிகளுக்கிடையே பயிரிடப்படுவதை ஊக்குவித்தல்.

**நிறுவகங்களின் கருத்துத் தெரிவிப்பு**

‘‘இறக்குமதி செய்யப்படும் பாஸ்மதி அரிசிக்கான கேள்வி உயர்வடைவதால் அரிசி இறக்குமதி அதிகரித்துள்ளது. அவ் அரிசிக்காக உலக சந்தையில் கூடிய விலையைப் ஏற்றுக்கொள்ள நேர்ந்தமையால் அரிசி இறக்குமதிச் செலவினம் உயர்வடைந்துள்ளது. 2005 அரிசி கிலோ கிராமொன்று இறக்குமதி செய்யப்படுவதற்காக ரூபா 30.05 செலவிடப்பட்டிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டளவில் அந்த அளவு ரூபா 53.60 வரை அதாவது 78 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது.

உர மானியத்தால் விவசாயிகளின் கடன்படுநிலை குறைவடைந்துள்ளமை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விவசாயிகளின் வறுமை ஒழிப்பிற்காக உர மானியத் தாக்கம் தொடர்பான கற்கை மூலம் கூட்டிக்காட்டப்பட்டுள்ளது. உர மானியத்தால் உரத்தைக் கடனுக்குப் பெற்றுக்கொள்ளும் முறை அகற்றப்பட்டமையால் வயல்பகுதியில் நெல் விற்பனை குறைவடைந்து களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யப்படுவதற்கும் இதன் படி போட்டி விலை முறை சக்தி அதிகரித்துள்ளமையும் அக்கற்கை மூலம் மேலும்

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அக் கற்கையின் படி உர மானியத்தால் வயலில் நெல் விற்பனை 34 சதவீதத்திலிருந்து 2 சதவீதம் வரை குறைவடைந்துள்ளதுடன் நெல் களஞ்சியப்படுத்தல் 20 சதவீதம் முதல் 64 சதவீதம் வரை அதிகரித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

### 3.9.3 விவசாயிகளின் வருமான நிலைக்கு ஏற்படும் தாக்கம்

உர மானியம் வழங்கப்படுவதன் மூலம் நெல் அறுவடையை அதிகரித்து விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தியவர்களது வாழ்வை மேம்படுத்த எதிர்பார்க்கப்பட்ட போதிலும் நெல் விற்பனை செய்யும் போது ஏற்படும் சிரமங்கள் காரணமாக விவசாயிகளின் வருமானம் குறைவடைந்ததன் விளைவாக மறு போகத்திற்காக தேவையான முதலீட்டுச் செலவினம் மேற்கொள்ளப்படுவதற்கு முடியாமையால் தேவையான சந்தர்ப்பத்தின் போது உரக் கொள்வனவு செய்யப்படுவதற்காக பணமின்மை மற்றும் இதன் காரணமாக நெற்செய்கைக்காகக் குறித்த காலத்திற்கு உரத்தைப் பயன்படுத்த முடியாமை போன்ற சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. எடுத்துக்காட்டாக, 2012 ஆம் ஆண்டின் போது பொலன்னறுவை மாவட்டத்தின் இந் நிலை கூடிய தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் மனம்பிட்டி, வெலிகந்த ஆகிய பகுதிகளில் சிவப்பு நீளமான, சிவப்பு சிறிய நெல் வகையை விற்பனை விலை குறைவடைந்ததன் மூலம் விவசாயிகளின் பொருளாதார நிலை வீழ்ச்சியடைவதற்குக் காரணமாகியிருந்தது.

**தெரிவிப்பு**

i. வருமான நிலை வீழ்ச்சியடைந்தமையால் பயன்பாடு குறித்தும் பாதகமான தாக்கம் காரணமாக நெல் உற்பத்தி குறைவடைந்து இதன் படி உர மானியத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எய்தப்பட்டிராமை.

ii. விவசாயிகளின் கடன்படு நிலை அதிகரிப்பு

iii. விவசாயிகள் நெற்பயிர்ச்செய்கையிலிருந்து விலகல்.

**பரிந்துரை**

i. நெல்லுக்காக உறுதியான விலையொன்றை நிர்ணயித்து இதனைத் தொடர்ந்தும் பேணல்.

ii. சந்தைக கோரலுக்கு இணையான நெல் வகையைப் பயிரிடுவதற்கு விவசாயிகளை ஊக்குவித்தல்.

iii. உறுதிப்படுத்தப்பட்ட விலைக்கு விவசாயிகளுக்கு எளிதாகவும் தேவையான சந்தர்ப்பத்தின் போதும் நெல் விற்பனை செய்யப்படுவதற்காக தேவையான அரச தலையீடு மேற்கொள்ளப்படல்.

iv. நெல் சந்தைப்படுத்தல் நிலையத்தின் நெல் கொள்வனவுப் பொறிமுறை மற்றும் முறைப்படுத்தல் அத்தியாவசியமானதாகும்.

**நிறுவகங்களின் கருத்துத் தெரிவிப்பு**

**பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.**

**3.10 நெல் உற்பத்திக் கிரயம்**

உர மானியம் வழங்கப்படும் முக்கிய மற்றும் அடிப்படை நோக்கமாக நெற்செய்கைத் துறையின் உற்பத்திக் கிரயம் குறைப்பதாகும். எவ்வாறெனினும், 2005 ஆம் ஆண்டு முதல் 2010 வரையான தெரிவிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று மாவட்டங்களில் ஒவ்வொரு போகத்திற்காக பல்வேறு நீர் வழங்கல் முறைகளின் படி ஒரு ஏக்கருக்காக நெற்செய்கைக் கிரயம் தொடர்பாக பின்வரும் தரவுகள் ஆய்வில் கண்டறியப்பட்டவாறு உர மானியத்தின் கீழான போதிலும் ஒரு ஏக்கருக்கான நெற்செய்கைக் கிரய முறை உயர்வடைந்திருந்தது. இது உர மானியம் வழங்கப்படுவதன் அடிப்படை நோக்கத்திற்கு முரணானதென்பது அவதானிக்கப்பட்டது.

**ஏக்கருக்கான நெற்பயிர்ச்செய்கைக் கிரயம் (மழை மார்க்கம்)**

**(கிரயம் ஏக்கருக்கு ரூபா)**


| | குருநாகல் | | அநுராதபுரம் | | பொலன்னறுவை | |
|---|---|---|---|---|---|---|
| | பெரும் போகம் | சிறு போகம் | பெரும் போகம் | சிறு போகம் | பெரும் போகம் | சிறு போகம் |
| | ------- | -------- | ------- | -------- | ------- | -------- |
| 2005 | 21,453 | 21,849 | 21,568 | 22,864 | 22,954 | 24,190 |
| 2006 | 21,919 | 23,626 | 22,535 | 23,888 | 22,175 | 23,491 |
| 2007 | 22,766 | 26,019 | 25,929 | 24,351 | 22,989 | 25,455 |
| 2008 | 26,450 | 29,134 | 28,151 | 30,179 | 28,566 | 29,997 |
| 2009 | 30,419 | 30,988 | 33,495 | 33,180 | 31,295 | 34,737 |
| 2010 | 33,333 | 34,397 | 34,644 | 35,750 | 35,022 | 35,198 |

மூலம் : ஹெ.கொ.க.ஆ. மற்றும் ப. நிறுவகம்

ஏக்கர் ஒன்றிற்கு பயரீட்டுக் கிரயம் மழைமார்க்க நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட குருநாகல், அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை போன்ற மாவட்டங்களில் பெரும் போகம் மற்றும் சிறு போகங்கள் வெவ்வேறாக கருத்திற்கொள்கையில் ஒவ்வொரு ஆண்டின் போதும் படிப்படியாக உயர்வடைந்திருந்ததுடன் அம் மூன்று மாவட்டங்களிலும் 2005 முதல் 2010 வரையான ஆண்டின் சராசரி பயிர்ச்செய்கைக் கிரயம் உயர்வடைந்தமை பின்வரும் வரைபடத்தில் தெளிவாகியுள்ளது.

நெல் உற்பத்திக் கிரயம் (ஒரு ஏக்கருக்கு)

குருநாகல் மாவட்டம் (கிரயம் ஒரு ஏக்கருக்கு ரூபா)




மூலம் : ஹெ.கொ.க.ஆ. மற்றும் ப. நிறுவகம்

மேற்குறித்த தரவுகளின் படி, குருநாகல், அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களின் மழைநீர் உதவியுடனான நெல் உற்பத்தியின் கிரயம் 2005 ஆம் ஆண்டுடனானவற்றுடன் ஒப்பிடுகையில் 2010 ஆம் ஆண்டின் போது முறையே 56 சதவீதமாகவும், 58 சதவீதமாகவும் 49 சதவீதமாகவும் காணப்பட்டன. இதற்கு இணையாக நெல்லின் விலை அதிகரிக்காமையால் நெல் உற்பத்தியின் நிலைப்பாட்டைப் போன்று விவசாயிகளின் வறுமையும் உயர்வடைந்த காரணத்தால் அவர்களின் வாழ்க்கை நிலை வீழ்ச்சியடைவதற்கு இது தாக்கமளித்திருந்தது.

**நெல் உற்பத்திக் கிரயம் (ஒரு ஏக்கருக்கு)**
**குருநாகல் மாவட்டம் (கிரயம் ஒரு ஏக்கருக்கு ரூபா)**

| | பெரும்போகம் | சிறு போகம் | கிரயத்தின் அதிகரிப்பு சதவீதமாக 2005 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் | |
|---|---|---|---|---|
| | | | பெரும்போகம் | சிறு போகம் |
| 2005 | 18,662 | 20,851 | -- | -- |
| 2006 | 21,190 | 21,342 | 13.55 | 2.35 |
| 2007 | 20,453 | 23,518 | 9.6 | 12.79 |
| 2008 | 26,927 | 28,371 | 44.29 | 36.07 |
| 2009 | 30,214 | 31,716 | 61.9 | 52.11 |
| 2010 | 31,819 | 32,849 | 70.5 | 57.54 |

மூலம் : ஹெ.கொ.க.ஆ. மற்றும் ப. நிறுவகம்

மேற்குறித்த தரவுகளைக் கருத்திற்கொள்கையில் மழைமார்க்க நெற்பயிர்ச்செய்கை மேலதிகமாக மேற்கொள்ளப்படும் குரநாகல் மாவட்டத்தில் 2005 பெரும் போகத்திற்கு ஒப்பாக 2010 பெரும் போகத்தின் போது ஒரு ஏக்கருக்காக பயிர்ச்செய்கைக் கிரயம் 70 சதவீதத்தாலும் 2005 சிறு போகத்திற்கு ஒப்பாக 2010 சிறு போகத்தின் மே போது அக் கிரயம் 57 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**தெரிவிப்பு**

உர மானியம் வழங்கப்படும் அடிப்படை நோக்கம் நெற்பயிரீட்டுத் துறையின் உற்பத்திக் கிரயத்தைக் குறைவடையச் செய்த போதிலும் முறைப்படி உற்பத்திக் கிரயம் அதிகரித்தமையால் நெல் பயிரிடப்படுவதற்குரிய ஏனைய கிரயம் (உரம் தவிர்ந்த) அதிகரித்திருந்தமை சுட்டிக்காட்டப்பட்டது. இதன் இறுதி முடிவாக

புதிதாகத் துறையில் நுழைவதில் குறைவும் தற்போது பயிரிடும் விவசாயிகளும் துறையில் இருந்து அகல்வதற்கான போக்கும் உள்ளமை.

**பரிந்துரை**

i. உர மானியம் வழங்கப்படுவதற்கு மேலதிகமாக நெல் பயிரிடப்படுவதற்காக தேவையான ஏனைய அடிப்படை தேவைகளான களைகொள்ளி கிருமி நாசினி, சீ சேமே செலவினங்கள் அறுவடை செய்யும் செலவினங்கள் ஆகியவற்றிற்காகவும் வசதிகள் ஏற்பத்திக்கொடுக்கக் கூடிய முறைகள் தொடர்பாகக் கவனம் செலுத்துதல்.

ii. உற்பத்திச் செலவினத்திற்கு ஒப்பாக நெல்லிற்காகச் செலுத்தப்படும் விலைகளில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய அதிகரிப்பு ஏற்படாமையும் இது தொடர்ந்து தளம்பலுக்குட்பட்டிருந்தமையால் ஏற்படும் பாதகமான விளைவைக் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல். எடுத்துக்காட்டாக நியாயமான உறுதிப்படுத்தல் விலையை நிர்ணயித்து இதனை முறைப்படி பேணல்.

**நிறுவகங்களின் கருத்துத் தெரிவிப்பு**

**கமத்தொழில் அமைச்சு**

"நெற்செய்கை உழைப்பு ஓர் நுட்பமான விவசாய முயற்சியாகும். இலங்கையில் உழைப்பிற்காகக் கூடிய செலவினத்தை மேற்கொள்வதற்கு நேர்ந்த காரணத்தால் நெல் செய்கையின் ஒட்டுமொத்தச் செலவினம் உயர்வடையும். இவ்வாறே நெற்செய்கைக்கு பொறிமுறையை அறிமுகப்படுத்துவது கமத்தொழில் அமைச்சின் நோக்காகும். 2015 ஆம் ஆண்டின் போது நெற்செய்கைக்குரித்தான நடவடிக்கைகள் பொறிமுறைப்படுத்தும் இலக்கில் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கு கலந்துரையாடப்படடு வருகின்றன.

**3.11 உர மானியத்தின் வினைத்திறன்**

மானிய உரப் பகிர்வு தொடர்பாக உரிய பயிர்ச்செய்கைப் போகத்திற்குரித்தாக தேசிய உரச் செயலகத்தால் விநியோகிக்கப்படும் சுற்றறிக்கையின் பிரகாரம் மானியத்தில் உரத்தைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் அறுவடை ஆக்கபூர்வமாகவும், விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்திற்கும்

தேசிய பொருளாதாரத்திற்கு நேர்ந்துள்ள தாக்கம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் ஒவ்வொரு விளைச்சல் போகமும் முடிவுற்று ஒரு மாதத்திற்குள் மதிப்பீடொன்றை மேற்கொண்டு அவதானிப்புக் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

உர மானியம் ஆரம்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையில் இலங்கைக்கு மானிய உரத்தை இறக்குமதி செய்வது தொடர்பாக ஏற்கப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 113,790,916,415 ஆகக் காணப்பட்டது. இதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கைக்கும் தேசிய பொருளாதாரத்திற்கும் நேர்ந்துள்ள தாக்கத்தை மதிப்பிடுவதற்காக சில மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக்கள் செயற்பட்டிராமை அக் குழுக்கூட்டங்கள் நடாத்தப்படாததன் மூலமும் அக் கூட்டங்கள் நடாத்தப்பட்ட போதிலும் (சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஒரு மாத காலம் கடந்ததை அடுத்து) முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிராமை கணக்காய்வு அவதானிப்பின் மூலம் தெளிவாகியது. ஒட்டுமொத்தமாக நோக்குகையில் உர மானியத்தை வழங்குவதன் மூலம் தேசிய பொருளாதாரத்தின் அறுவடை வினைத்திறனிற்கும் விவசாயிகளின் வாழ்க்கைக்கு நேர்ந்துள்ள தாக்கம் தொடர்பாக முறையான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**தெரிவிப்பு**

i. மானிய உரம் இறக்குமதி செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்படுவதற்கு தொடர்புபட்ட தரப்பினருக்கு தமது செயற்பாட்டை முறைப்படி மேற்கொண்டிராமை.

ii. உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் எதிர்பார்க்கப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்டிராமை.

**பரிந்துரை**

i. ஒவ்வொரு பயிரின போகத்தின் முடிவிலும் மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழுவால் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரப் பகிர்வு நடைமுறை விளைச்சலை மதிப்பிடலும் அதன் விளைவை பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு அறிவித்தலும்.

ii. மேற்குறித்த அறிக்கைகள் கிடைக்கப்பெற்றதை அடுத்து உரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினரால் நோக்கத்திலிருந்து விலகுதலை சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

**நிறுவகங்களின் கருத்துத் தெரிவிப்பு**

**பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.**

**3.12 ஏக்கள் வரி அறவீடு**

2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை ஏக்கர் வரி அறவிடும் முன்னேற்றம் பரீட்சிக்கப்படுவதற்காக வருடாந்தம் இலக்கு மற்றும் ஒப்பிடுகையில் ஒவ்வொரு ஆண்டின் போதும் உள்ளபடியான முன்னேற்றம் குறைவான சதவீதத்தில் நிலவுவது அவதானிக்கப்பட்டது.

| **ஆண்டு** | **வருடாந்த இலக்கு** | **அறவீடுகள்** | **அறவீடுகள் சதவீதமாக** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | |
| 2007 | 30,473,419 | 10,570,981 | 35 |
| 2008 | 40,526,425 | 29,146,977 | 72 |
| 2009 | 44,133,317 | 11,354,553 | 26 |
| 2010 | 55,658,952 | 37,644,794 | 67 |

மூலம் : கமநல அபிவிருத்தி திணைக்களம்

2010 ஆம் ஆண்டு வருடாந்த இலக்கு முன்னைய ஆண்டுகளின் நிலுவைப் பணத்துடன் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அறவீடுகளும் முன்னைய ஆண்டுகளின் நிலுவைத் தொகையுடன் காண்பிக்கப்பட்ட காரணத்தால் அறவீட்டு சதவீதத்தை ஒப்பிடுவது சரியானதன்று. 2010 ஆம் ஆண்டின் ஏக்கர் வரி வருடாந்த இலக்கு மற்றும் அவற்றின் அறவீடுகள் தொடர்பாக சில மாவட்டங்களில் சரியான தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. ஏக்கர் வரி அறவிடும் வருடாந்த இலக்குடன் அறவீட்டு சதவீதம் ஒப்பிடப்படுகையில் சில ஆண்டுகளின் போது நெற்செய்கை கூடியளவில் மேற்கொள்ளப்படும் மாவட்டங்களின் கருத்திற்கொள்ளப்படுகையில் குறைவான மட்டத்தில் நிலவுவது அவதானிக்கப்பட்டது.

**எடுத்துக்காட்டு :-**

| | 2007 | | 2008 | | 2009 | |
|---|---|---|---|---|---|---|
| **மாவட்டம்** | **வருடாந்த இலக்கு** | **அறவீட்டு சதவீதம்** | **வருடாந்த இலக்கு** | **அறவீட்டு சதவீதம்** | **வருடாந்த இலக்கு** | **அறவீட்டு சதவீதம்** |
| ------------ | ------------ | -------------- | ------------ | ------------ | ------------ | ------------ |
| | **ரூபா** | | **ரூபா** | | **ரூபா** | |
| ஹம்பாந்ரோட்டை | 1,524,554 | 8 | 2,042,235 | 33 | 3,115,918 | 2 |
| குருநாகல் | 2,927,551 | 27 | 7,839,621 | 99 | 9,942,462 | 19 |
| அநுராதபுரம் | 3,521,331 | 41 | 4,489,422 | 73 | 4,734,621 | 21 |
| பொலன்னறுவை | 2,409,652 | 42 | 2,409,652 | 67 | 2,472,190 | 15 |
| அம்பாறை | 2,959,396 | 5 | 3,969,675 | 35 | 3,199,410 | 8 |

மூலம் : கமநல அபிவிருத்தி திணைக்களம்

உர மானியம் வழங்கப்படுவதன் மூலம் பயிரிடப்படுகின்ற வயல் காணிகளின் அளவின் அதிகரிப்பு நேர்ந்தமையால் இதன் படி ஏக்கர் வரி அறவீட்டு சதவீதம் பாரியளவு சதவீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஏக்கர் வரி அறவீட்டு சதவீதம் குறைவான நிலையில் நிலவியது.

**தெரிவிப்பு**

i. ஒவ்வொரு ஆண்டின் போதும் அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய ஏக்கர் வரி அளவை அறவிடாமையால் அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய வருமானமொன்று கிடைக்கப்பெறாது இழக்கப்பட்டிருத்தல்.

ii. கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களின் கடமைகளை ஆக்கபூர்வமாக மேற்கொள்ளாமை.

**பரிந்துரை**

i. உர மானியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தைப் பெற்றுக்கொள்வதாயின் தமக்குரித்தான (வயல் காணிகளைப் பதிவேட்டின் படி) காணி அளவிற்கு ஏற்ற வகையில் செலுத்தப்பட வேண்டிய ஏக்கர் வரி அளவைச் செலுத்தியிருப்பதை கட்டாயப்படுத்தல்.

ii. பண்டைய வயல் அறுவடையின் போது அளவிற்கு இணங்கும் வகையில் புதிதாக அறவிடப்பட வேண்டிய ஏக்கர் வரியின் அளவைச் சரியாகக் கணிப்பிடப்படுவதற்கு இயன்ற வகையில் வயல் காணிகளின் பெயர் பதிவேட்டை மீளமைத்தல்.

iii. ஏக்கருக்கான வரி இலக்கு மற்றும் அறவீட்டு சதவீதத்தை நாளதுவரையாகப் பெறக்கூடிய வகையில் கமநல சேவைகள் திணைக்களத்தின் தரவு முறைமையை நாளதுவரையாக்கல்.

**நிறுவகங்களின் கருத்துத் தெரிவிப்பு**

**கமநல அபிவிருத்தி திணைக்களம்**

‘‘கமநல அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் படி, அறவிடப்படும் ஏக்கர் வரித் தொகை கமநல சேவைகள் குழு வருமானமாகக் கருதப்படுவதுடன் இது அக் குழுவின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு குழு ஊழியர் சம்பளம் மற்றும் நிலையத்தின் செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படுகின்றன

ஏக்கருக்கான வரித் தொகை அறவீடு மேற்குறித்த அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கமநலக் காணி உரிமையாளர்களிடமிருந்தும் காணியைப் பயன்படுத்துபவர்களிடமிருந்தும் மேற்கொள்ளப்படுவதனால் அதன் உரிமையைத் தீர்மானிக்கும் நிபந்தனையாகக் கருதப்படாததுடன் இவ் ஏக்கருக்கான வரிக் கொடுப்பனவு உர மானிய வழங்கல் நிபந்தனையாகக் கருதப்படுவது தொடர்பாக கொள்கை ரீதியான சிக்கல் நிலவுகின்றது.

கமநல அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் படி, இவ் ஏக்கர் வரித் தொகை ஒவ்வொரு ஆண்டின் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமையால் இதற்கான கள உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் அறிவூட்டப்படுவதுடன் குறிப்பாக ‘‘ஏக்கர் வரி வாரம்’’ போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு இவ் வரி அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இவ்வாண்டின் போது அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், இவ் ஏக்கர் வரி இலக்குக் கணிப்பீட்டின் போது பாதுகாப்புக் காணிகள். தோட்டக் கம்பனிகள், காணிகள் போன்ற பாரிய விவசாயக் காணிகளும் உள்ளடக்கப்பட்டு இலக்கு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பல்வேறு அதிகாரச்சட்டங்களின் மூலமும் நாளதுவரையாக எடுக்கப்படும் பல்வேறு தீர்மானங்களின் காரணமாகவும் இவ் விவசாயக் காணிகளின் வரி அறவீட்டில் சிக்கல்கள் நிலவுகின்றன. ஆகையால் எதிர்பார்க்கப்பட்ட இலக்கும் அறவிடப்படும்

வரித் தொகைக்கும் இடையே சதவீதமாக அறவீட்டில் பாரிய அதிகரிப்பு காண்பிக்கப்படாத போதிலும் 2009 ஆம் ஆண்டிற்குரித்தாக அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள குருநாகல், அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை போன்ற மாவட்டங்களின் வரி அறவீடுகள் 2013 செப்தெம்பர் 31 ஆம் திகதி வரையில் முறையே 2009 ஆம் ஆண்டின் போது 19 சதவீதத்திலிருந்து 75 சதவீதம் வரையிலும், அநுராதபுரம் 21 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரையிலும், பொலன்னறுவை 15 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை திணைக்களத்தின் தரவு அறிக்கையின் படி காண்பிக்கப்பட்டுள்ளது.

## 4. முடிவு

இலங்கை விவசாய பொருளாதாரத்தை மேலும் முன்னேற்றகரமான நிலையில் தீர்க்கமாகவும் தொடர்ச்சியாகவும் பேணிவருவதற்காக மானிய அடிப்படையில் குறைந்த பணத்திற்கு உரத்தை விவசாயிகளுக்கு வழங்குவது தேசிய உர நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகக் காணப்பட்டது. ஒட்டுமொத்தமாக எடுக்கையில் பல்வேறு குறைபாடுகளின் மத்தியிலும் நெல் உற்பத்தி முறையில் ஏதேனும், முன்னேற்றமொன்றை அடைந்திருந்ததுடன் மேலும் மேம்படுத்துவதற்கு அல்லது சீராக்குவது தொடர்பாக அறிக்கையில் நீண்ட முறையில் கலந்துரையாடப்பட்ட துறைகள் பின்வருமாறாகக் காணப்பட்டன.

**உரத்தின் தேவைப்பாடு சரியாக மதிப்பிடல்**

குறித்த போகத்திற்காக உரத் தேவைப்பாடு சரியாக மதிப்பிடப்படுவதற்கு தமது மாவட்டத்தில் உரத்தின் தேவைப்பாடு குறிப்பிடப்பட்ட குறித்த தினத்தில் முன்னர் குறிப்பிட்டு அனுப்புமாறு மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழுவிற்கு தேசிய உரச் செயலக அலுவலகத்தால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த தினத்திற்கு முன்னர் தமது தேவைப்பாட்டை அறிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் நிலவியமை அவதானிக்கப்பட்டது. மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழு தமது மாவட்ட உரத் தேவைப்பாட்டை மதிப்பிடுகையில் தமது மாவட்டத்தில் குறித்த கமநல சேவை நிலையங்களில் உரத் தேவைப்பாடு கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த கமநல சேவை நிலையங்களில் உரத்தேவைப்பாட்டை மதிப்பிடுகையில் அவர்களால் குறித்த ஓர் முறை பின்பற்றப்பட்டமை அவதானிக்கப்பட்டிராததுடன் இது நாட்டின் உரத் தேவைப்பாட்டை முறையான வகையில் எதிர்வு கூறுவதற்கு தடங்கலாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. சரியாக உரத் தேவைப்பாட்டை முறைப்படி

எதிர்வுகூறாமையின் காரணமாக நாட்டில் மொத்த உரத்தேவைப்பாடு ஒவ்வொரு போகத்தின் போதும் மிகை மதிப்பிடப்படுவதைக் காணக்கூடியதாக இருந்தது. 2000 இன் 46 ஆம் இலக்க வயல்காணி தொடர்பான திருத்தல் அதிகாரச்சட்டத்தின் 53 ஆம் பிரிவின் படி வயல் காணிப் பதிவேடு சரியாகப் பேணப்படல், சரியான வயல் காணி அளவை இனங்கண்டுகொள்வதற்கும் இதன் படி உரத் தேவைப்பாட்டைச் சரியாக மதிப்பிடுவதற்கும் காரணமாகியிருந்தது.

**மானிய உர நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலைப் பெற்றுக்கொள்ளல்.**

கமநல திணைக்களத்தின் உரப் பரிந்துரைக் குழுவால் ஒவ்வொரு காலநிலை வலயத்தின் படி நீர் வழங்கல் முறைப்படி உர நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைச்சல் முன்னைய காலப்பகுதியின் போது கிடைக்கப்பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் இதற்காக உரிய உர வகைகள் 3 இன் பரிந்துரை செயற்படுத்தல் அல்லது திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன் படி எதிர்பார்க்கப்பட்ட விளைச்சலும் திருத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் நிலவியதுடன் நெல் விளைச்சல் குறைவடைவதற்குத் தாக்கமளித்த காரணங்களில் உள்ளடங்கிய சேதன உரப் பயன்பாட்டில் குறைவு, உரப் பகிர்வு மற்றும் நீர் முகாமைத்துவ நலிவுகள் போன்ற காரணங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளன.

**உர மானியத்தின் கீழ் பயிரிடப்படும் வயல் காணிகளின் அளவில் அதிகரிப்பு**

உர மானியச் செயற்பாட்டின் கீழ் ஒரு நோக்கமான ஒட்டுமொத்த நெற்செய்கை பண்ணக்கூடிய வயல்காணிகளின் அளவில் அதிகரிப்பை ஏற்படுத்துவதாகும். இதன் படி 2006 ஆம் 2007 ஆம் ஆண்டுகளிற்கு முன்னைய ஆண்டுகளிற்கு ஒப்பாக பயிரிடப்பட்டகாணிகளின் அளவு குறைவடைந்திருந்ததுடன் 2008 ஆம் ஆண்டு முதல் முறையற்ற வகையில் எனினும் முன்னேற்றமடையும் நிலை தென்பட்டது. எனினும், ஒட்டுமொத்தமாக நோக்குகையில் செய்கைபண்ணக்கூடிய காணியின் அளவில் பயிரிடப்பட்ட வயல் காணியின் அளவு திருப்திகரமான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டிராமையால் இதற்காக முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்த வேண்டியிருந்தது.

**எதிர்பார்க்கப்பட்டவாறு அரிசி இறக்குமதிச் செலவினம் குறைவடையாமை**

உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டவாறு விவசாயிகள் நெற்செய்கைக்கு நெகிழ்ச்சியடைவதற்கான போக்கை அதிகரித்தல் மற்றும் இதன் மூலம் ஒட்டுமொத்த அரிசி உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் அன்னிய செலாவணியைச் சேமிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 2005 ஆம் ஆண்டு முதல் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவும் இறக்குமதிச் செலவினமும் முறைப்படி அதிகரித்துள்ளமையைக் கருத்திற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

**எதிர்பார்க்கப்பட்டவாறு நெல் உற்பத்தியில் கிரயம் குறைவடையாமை**

உர மானியச் செயற்பாட்டில் அடிப்படை நோக்கம் நெல் உற்பத்தித் துறையில் உற்பத்திக் கிரயத்தைக் குறைப்பதான போதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய நெல் உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களில் ஒவ்வொரு போகத்தின் போதும் கிரயம் படிப்படியாக அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. இது உர மானியம் வழங்கப்படும் ஒரு அடிப்படை நோக்கத்திற்கு முரணானதுடன் இது உரம் தவிர்ந்த ஏனைய உள்ளீடுகளின் கிரயம் அதிகரித்தமையால் ஏற்பட்டிருந்தது.

**நீர்ப்பாசன முகாமைத்துவம்**

கணக்காய்வின் போது தேர்ந்தெடுக்கப்பட்ட நெல் பயிரிடப்படும் பிரதேசங்கள் தொடர்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் படி நீர்ப்பாசன முறைமைகள் பல காலத்திற்குக் காலம் மீளமைக்கப்பட்டிராமையால் அவற்றின் நீர் பாரியளவில் வீழ்ச்சியடைந்திருந்தமையும் அக் காரணத்தினால் பெரும்போகத்திற்குத் தாக்கமளிக்கும் பருவபெயர்ச்சி மழை நீர் ஆகக் கூடியளவில் சேகரிக்கப்படுவதற்கு முடியாது போனமையும் அதிக மழை காரணமாக அவை உடைந்து போவதற்கான சாத்தியம் உள்ளமையால் இதன் மூலம் ஏற்படக்கூடிய பயிர்ச் சேதங்களைத் தவிர்த்து மழை நீர் ஆகக் கூடியளவில் சேகரிக்கப்படுவதன் மூலம் முக்கியமாக சிறு போகத்தின் நீர்ப் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்கும் பெரும் போகத்தின் போது நீரால் ஏற்படக்கூடிய பாதிப்பைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

**மானிய உரக் கொள்வனவு**

இறக்குமதி செய்யப்படும் உரத்தின் தரம் மிகவும் முக்கியமானதால் உரத்தின் தரத்தைக் கருத்திற்கொண்டு மானிய உரக் கொள்வனவு நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கொள்வனவு நடவடிக்கைகள் தொடர்பாக கமநல மற்றும் வனசீவராசிகள் அமைச்சிடமிருந்து கோரப்பட்ட தகவல்கள் 2013 யூலை 31 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் கொள்வனவு நடைமுறைகள் முறைப்படி பின்பற்றப்பட்டதா என்பது குறித்து அவதானிப்புகளைச் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்ததுடன் இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட ஏனைய விடயங்களின் பிரகாரம் உரக் கம்பனிகள் இரண்டிற்காக அரசாங்கத்தால் செலுத்தப்பட வேண்டியுள்ள பொறுப்புக்களின் அளவு அதிகரித்து வருவதும் கடன் பத்திரங்களுக்காக தேவையான பணம் வழங்கப்படுவதில் தாமதமடைவதாலும், பாரிய வட்டி செலுத்தப்பட நேர்வதும், கொள்வனவுச் சிக்கல்களால் தீர்க்கப்படும் சிக்கல்களுக்காக மேலதிக செலவினங்களை ஏற்க நேர்ந்தமை போன்ற விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்துதல்.

**போதியளவு களஞ்சிய வசதிகள்**

உரத்தை இறக்குமதி செய்யும் கம்பனிகளுக்காக கமநல சேவை நிலையங்கள் மற்றும் கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் பிரிவில் போதுமான களஞ்சிய வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறின்மையால் உர இருப்பைச் சேகரித்துக்கொள்வதில் பாதிப்பு ஏற்பட்டதுடன் சில சந்தர்ப்பங்களில் பாரிய உர இருப்பு சேதமடைந்திருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டமையால் உரிய வசதிகளை மேம்படுத்திக்கொள்ளல்.

**சேதன உரப் பயன்பாடு**

இரசாயன உர மானியத்திற்கு இணையாக சேதன உரத்தை விஸ்தரிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்படுத்தி நடாத்திச் செல்வதற்கு இந் நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்ததுடன் கமநலத்துறை சுற்றாடலுக்கு நட்பான முறையில் அபிவிருத்தி செய்வது அதன் நோக்கமாகும். எவ்வாறெனினும், எதிர்பார்க்கப்பட்டவாறு சேதன உரச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிராமையால் இரசாயன உரத்தின் பயன்பாட்டைக் குறைத்துக்கொள்ள முடியாது போனமையால் நீண்டகாலத்திற்கு ஏற்படக்கூடிய சுற்றாடல் மற்றும் சுகாதாரச் சிக்கல்கள் அன்னிய செலாவணி வெளிநாட்டிற்கு அதிகளவில் வெளியேறுவதற்கான வாய்ப்புத் தொடர்பில் போதியளவு கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இதன் படி, அந் நலிவுகளைத் தவிர்ப்பதற்காக தெரிவு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இக் கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கிய பரிந்துரைகள் பின்வருமாறு காண்பிக்கப்பட முடிவதுடன் இதற்கு மேலதிகமாக தொடர்புபட்ட நிறுவகங்களின் கருத்துக்களும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய ஏனைய விடயங்களும் கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**பரிந்துரை**

- நாட்டின் உரத் தேவைப்பாட்டைச் சரியாகத் தீர்மானிக்க முடியாமைக்கு அடிப்படைக் காரணம் வயல் காணிகள் தொடர்பாக நாளதுவரையான தகவல் முறைமை ஒன்று இன்மையால் ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களின் நிலையில் விவசாயிகளுடன் களத்தில் வயல் காணிகளை இனங்கண்டு அவற்றை அளந்து சரியாக அளவைத் தீர்மானிப்பதற்கும் உடனடியான நடவடிக்கையை அறிமுகப்படுத்தல்.

- வயல் காணிகள் பல பிரதிநிதித்துவப்படும் வகையில் மண்ணின் வளத்தை ஆராய்தல், நெற்பயிர்ச்செய்கைக்குத் தேவையான ஏனைய காரணிகளை ஆராய்ந்தறிதல், இதன் படி, தற்போது பயன்படுத்தப்படும் உரத்தைப் பரிந்துரைத்து திருத்துவதற்கு தேவைப்படின் இதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.

- உர மானிய செயற்பாட்டின் வெற்றி நிலை குறித்து நெல் பயிரிடப்படும் பகுதிகளில் உள்ள வாவிகள் மற்றும் நீர்த்தேக்கங்களை நவீனமயமாக்கும் முறையான நடைமுறையின் தேவைப்பாடு இங்கு தெளிவாகத் தென்படுகின்றது. மேலும், கால்வாய்களில் நிலவும் பற்றாக்குறை காரணமாக பாரியளவில் நீர் விரயமாவதையும் காணக்கூடியதாக உள்ளதுடன் புதிதாக செய்கைபண்ணப்படுவதற்கான காணிகள் உருவாக்கப்படுகையில் கால்வாய்களின் நிலைமையை மேம்படுத்துவது கட்டாய தேவைப்பாடாக உள்ளது. ஆகையால் நீர்ப்பாசன மற்றும் மழை நீரைப் போதியளவில் முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான அடிப்படைக் காரணியான தற்போதைய நீர்ப்பாசன முறைமையை மேம்படுத்தல் மற்றும் மழை நீரை முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக போதிய கவனம் செலுத்துதல்.

- சுற்றாடல் நட்புடையதாக விளைச்சலை அதிகரிப்பதற்காக சேதன உரப் பயன்பாட்டை ஊக்கப்படுத்தி அக் சேதன உர உற்பத்தியை விஸ்தரிப்பது கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் அத்தியாவசியமான கடமையாகும். அங்கு காபனிக் உரத்தின் உற்பத்தி உர மானியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அடிப்படைத் தகமையாகக் கருதப்பட்டு மானிய இரசாயன உரம் ஒவ்வொரு விவசாயிகளுக்குப் பரிந்துரை செய்யப்படல் வேண்டும். அவ்வாறே இரசாயன உரத்துடன் சேர்க்கப்பட வேண்டிய சேதன உரத்தின் அளவை நிர்ணயித்து அது தொடர்பாக விவசாயிகளை அறிவூட்டி இரசாயன உரத்தின் பயன்பாட்டைப் படிப்படியாகக் குறைப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- மேலே அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் பல கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் நிலையிலிருந்து இதற்கு மேலான உத்தியோகத்தர்கள் வரையான உத்தியோகத்தர்கள் குழுவின் கண்காணிப்பு மற்றும் தேவையான ஈடுபாடு போதாமை போன்றவற்றால் ஏற்படுவதால் உத்தியோகத்தர்களின் வெற்றிடத்தை நிரப்புதல் மற்றும் அவர்களுக்குத் தேவையான வசதிகளை போதுமானளவில் வழங்கப்படுதல் போன்ற விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படல்.

- உர இறக்குமதியின் போது நாட்டின் காலநிலை மற்றும் மண்ணின் வளமான நிலைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தரமான உரத்தை இறக்குமதி செய்வதற்குப் பொறுப்பாக இருப்பதும் இரசாயன உரத்தின் பயன்பாட்டினால் நேர்ந்ததாக சமூகத்தின் கலந்துரையாடலுக்குட்பட்ட பாதகமான தாக்கங்கள் குறித்த அபிப்பிராயங்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய ஆராய்ச்சி நிறுவகங்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் அந் நிறுவகங்களின் பரிந்துரையை உடனடியாக செயற்படுத்தப்பட வேண்டும்.

  இந் நிகழ்ச்சித்திட்டத்திற்குரித்தாக கூடியளவில் கலந்துரையாடப்படும் மேற்குறித்த விடயங்கள் குறித்து முறையான கவனம் எடுக்கப்பட்டு இந் நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.